

# சரீரத்தைப் பிரிந்த ஆவிகள்

தந்தை. து. ஜான் ரபீந்திரநாத்

இது ஒரு இயேசு வருகிறார் வெளியீடு

சரீரத்தைப் பிரிந்த ஆவிகள்
தந்தை. து. ஜான் ரபீந்திரநாத்

# சரீரத்தைப் பிரிந்த ஆவிகள்

ஆசிரியர்

தந்தை . து. ஜான் ரபீந்திரநாத்

தொகுப்பாசிரியர்

சகோ. பால்ராஜ் மோசஸ்

இது ஒரு இயேசு வருகிறார் வெளியீடு

| | | | |
|---|---|---|---|
| *முதல் பதிப்பு* | *1979* | *பிரதிகள்* | *1000* |
| *இரண்டாம் பதிப்பு* | *1983* | *பிரதிகள்* | *1000* |
| தொகுக்கப்பட்ட *மூன்றாம் பதிப்பு* | *2014* | *பிரதிகள்* | *1000* |

| | | |
|---|---|---|
| Copy Right Reserved | : | JESUS COMES. |
| Printing | : | New Shenbagam Offset |
| Donation | : | 50/- |
| No. of pages | : | 77 |

***இயேசு வருகிறார்***

***48 பி, அம்பை ரோடு***

***திருநெல்வேலி 627 005***

***தென் இந்தியா.***

**Ph.No: +91462 2351352**

**Email: contact@jesuscomes.net**

**Web: www.jesuscomes.org.in**

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அ) | அர்ப்பணம் | சகோ. பால்ராஜ் மோசஸ் | (6) |
| ஆ) | என்னுரை | தந்தை து. ஜான் ரபீந்திரநாத் | (7) |
| இ) | தொகுப்புரை | சகோ. பால்ராஜ் மோசஸ் | (9) |
| ஈ) | முன்னுரை | சகோதரி M. பூமணி | (10) |
| உ) | அணிந்துரை | டாக்டர் | (11) |
| ஊ) | பரிந்துரை | போதகர் ராஜேந்திரன் மோசஸ் | (12) |

1) பரலோகில் அந்தஸ்து (15)

2) பரலோகில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற (23)

3) ஆவி, ஆத்துமா, சரீரம் (37)

4) ஒரு மனிதனின் இருந்து ஆவி பிரியும்போது (41)

5) அடக்க ஆராதனை (47)

6) குழந்தைகள் (53)

7) இரத்தசாட்சிகளின் ஆவிகள் (61)

8) தற்கொலை செய்தவர்களின் ஆவி (67)

9) பூரணமாக்கப்பட்டவர்கள் (73)

# <u>அர்ப்பணம்</u>

*பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசுகிறிதுவுக்கும், மகா பரிசுத்தமுள்ள ஆவியானவருக்கும் நன்றி.*

*தாயின் கருவில் ஒரு மகா பெரிய தீர்க்கதரிசியை தோற்றுவித்தவரும், ஐந்து முறை இக்கட்டுகளிலிருந்தும் மரண ஆபத்துக்களிலிருந்தும் விடுவித்தவரும், உலகம் முழுவதும் ஆண்டவருடைய வருகையை பிரகடனம் செய்ய பயன்படுத்தியவரும், பரலோகத்தையும் நரகத்திற்குரிய காரியங்களையும் அசுத்த ஆவிகளின் நடமாட்டங்களையும் கிருபையாய் வெளிப்படுத்தி,*

*பிறந்தநாள் முதல் 75 ஆண்டுகள் ஒரு குழந்தையை தகப்பன் துாக்கி சுமக்கிற வண்ணமாக சுமந்து தேசங்களுக்கும், ராஜ்யங்களுக்கும் ஆசீர்வாதமாக்கி, லட்சக்கணக்கான மக்கள் ஆண்டவராகிய இயேசுகிறிதுவை அறியவும், ஆயிரக்கணக்கானவர்களை வைராக்கியமுள்ள ஊழியக்காரர்களாய் எழும்பவும் துணை புரிந்த பிதாவுக்கும், குமாரனுக்கும் , பரிசுத்தாவியானவருக்கும் இந்த நுாலை அர்ப்பணம் செய்கிறேன்.*

**சகோ. பால்ராஜ் மோசஸ்**

# என்னுரை

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான நண்பர்களே, மிகவும் கருகலான இந்த சத்தியத்தை உலகிற்கு எடுத்துரைக்க எத்தனையோ வருஷங்கள் ஆசித்தேன். ஆயினும் சரீரத்தைப் பிரிந்த ஆவிகளின் உண்மையான நிலையை அறியும்வரை எழுதுவது தவறு என்று என் உள்ளத்தில் உணர்ந்தபடியால் காலதாமதமாகிவிட்டது. இந்தப் பாவ உலகில் எத்தனையோ திரளான மக்கள் மரணத்திற்குப்பின் வாழ்வு உண்டோ இல்லையோ என்ற சந்தேகத்துடன் மரிப்பதை நினைத்தபோது சிறு குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழுதேன்.*

*மனிதனை உருவாக்கி அவனுக்கு ஒரு அருமையான விலையேறப் பெற்ற ஆத்துமாவையும் பிதா கொடுத்திருக்கிறார். மனித உயிர் கண்களுக்குக் காணக் கூடாததாக இருந்தபோதிலும் ஆவியின் உலகத்தில் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகிறது என்பதை வேதத்தோடு இணைத்து அடிமை அனுபவித்தவைகளையும் தொகுத்து எழுத துாண்டப்பட்டேன்.*

*அநித்தியமான இந்தப் பாவம் நிறைந்த உலகில் ஒரு மனிதன் தன் உயிரைக் குறித்து அல்லது தன் ஆவியைக் குறித்து அல்லது தன் ஜீவனைக் குறித்து அறிய வேண்டியது அவசியமா என்றால், அதற்குத் தகுந்த பதிலை உங்களோடு பகிர்ந்து கொள்ளட்டுமா? ஆம் உயிர், ஆத்துமா, சரீரம், ஆவி , ஜீவன் என்ற பதங்களை மனிதன் தன் வாழ்வில் அடிக்கடி பயன்படுத்துகிறான். நிழல் போன்ற வாழ்வில், மாயையான நாட்களில், புல்லுக்கு ஒப்பான மனிதன் தனக்கு மறுவாழ்வு ஒன்று உண்டு என்று அறியாத காரணத்தினால் அவனது மரணம் சமாதானமற்றதாய் காணப்படுகிறது. கல்வியின் உச்ச வரம்பை அடைந்த மனிதனுடைய முடிவையும், செல்வத்தின் பெருக்கில் மிதந்த மனிதனுடைய முடிவையும் தெய்வம் கொடுத்த குறுகிய வருஷங்களில் உருவாக்கினவரை மறந்து மனிதனுடைய முடிவையும்*

கண்டபோது தான் அருமையான உயிர்களின் நிலை என்ன என்று எண்ணி இந்தச் சிறிய புத்தகத்தை எழுத பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டேன்.

நண்பர்களே, மண்ணினால் உருவாக்கப்பட்ட மனிதன் தெய்வத்தின் சாயலையும், தெய்வத்தின் மகிமையையும் தரித்துக் கொள்ளத்தக்கதாகவே

(ஆதியாகமம் 2 : 7) அவனது நாசியில் தேவன் ஜீவ சுவாசத்தை ஊதினார். அப்போது மனிதன் ஜீவாத்துமாவானான். ஆதியில் மனிதன் பெற்ற இந்த ஜீவ சுவாசம் அவனது பாவ சடலத்தை விட்டுப் பிரிந்த பின்னர் எங்கே செல்லுகிறது என்று அறியவே இந்த நூல் எழுதப்பட்டது. மனிதன் காற்றை அல்லவா சுவாசிக்கிறான். சுவாசிக்கிற காற்று வேறு. ஜீவனுள்ள தேவன் கொடுக்கும் ஜீவ சுவாசம் வேறு. கடவுள் சிருஷ்டிக்கும்போது (ஆதியாகமம் 1 : 6) தண்ணீர்கள் மத்தியில் ஆகாய விரிவை உண்டு பண்ணினார். இந்தக் காற்றை மனிதன் சுவாசித்து பிராண வாயுவை உட்கொண்டு கரியமல வாயுவை வெளிப்படுத்துகிறான். ஆனால் தெய்வம் மனிதனுக்குக் கொடுத்த ஜீவ சுவாசம் செய்யும் கிரியைகளையும், சரீரத்தை விட்டுப் பிரிந்த பிறகு அதின் நிலையையும் குறித்து அறிந்துகொள்வது மிகவும் அவசியமல்லவா? ஞானிகளுக்காக அல்ல என்னைப் போன்ற எளிமையும் சிறுமையுமானவர்கள் தங்களது சுவாசம், ஆவி, ஜீவன். உயிர் மரணத்திற்குப் பின் எங்கே செல்லுகிறது என்றும், கிறிதுவின் இரண்டாம் வருகையின் இரகசியங்களையும் அறிந்து தங்களைக் கர்த்தருக்கென்று ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றே ஜெபத்தோடு இந்தப் பரிசுத்த வார்த்தைகளை சமர்ப்பிக்கிறேன்.

கர்த்தரின் ஆவியானவர் என்னைப் பயன்படுத்தும்படியாக ஜெபித்த பரிசுத்தவான்களுக்கு என் நன்றியைக் கண்ணீரோடு செலுத்திக்கொள்ளுகிறேன். ஆண்டவராகிய இயேசுகிறிது தாமே இதை வாசிக்கும் அன்பர்களை ஆவியின் அனலை அடைய உதவி செய்வாராக.

**சகோ. து. ஜான் ரபீந்திரநாத்**

# தொகுப்புரை

கடந்த சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக அன்பு தகப்பனாரும் என் ஆவிக்குரிய தந்தையுமாகிய அப்போஸ்தலர் து. ஜான் ரபீந்திரநாத் அவர்களோடு நான் ஒரு நிழலைப் போல அவரோடு கூடவே இருக்கும் கிருபையைப் பெற்றேன்.

அவரோடு கூட இருந்த நாட்களில் வேதத்தின் மறை பொருள்களையும், பரலோக நரக தரிசனங்களையும், ஒரு மனிதன் மரணம் அடைந்த பின்பு என்ன நடக்கும்? ஆவிக்குரிய உலகில் என்ன சம்பவிக்கிறது? என்றெல்லாம் அவர் கற்று கொடுத்த காரியங்களையும், பத்திரிகைகளிலும், உபவாசக் கூட்டங்களிலும், வேதாகமக் கல்லூரிகளிலும் கற்றுக் கொடுத்தவைகளையும், அவர் மூலமாய் கண்டவைகளையும், கேட்டவைகளையும் தொகுத்து அநேகருடைய பிரயோஜனத்திற்காகவும் அநேகம் பேர் விரும்பி கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் இதற்கு முன்பு நீங்கள் அறிந்திராத கேள்விப்பட்டிராத சில காரியங்களை அப்பா அவர்கள் மூலமாக கர்த்தர் வெளிப்படுத்தினவைகளை இதில் தொகுத்து எழுதியிருக்கிறேன்.

இதில் என்னுடைய பணி அப்பா அவர்கள் மூலமாக வெளி வந்த சத்தியங்களை தொகுத்திருப்பது மட்டும் தான்.

இந்த 20ம் நூற்றாண்டில் உலகிற்கும் பிசாசுக்கும் சவாலாய் இருந்து என்னைப் போல ஆயிரக்கணக்கானோரை கர்த்தருடைய ஊழியம் செய்யும்படி காரணமாக இருந்த நீதிமானும் பரிசுத்தவானுமாகிய அப்பா அவர்களுடைய **சரீரத்தைப் பிரிந்த ஆவிகள்** என்ற புத்தகத்தில் தொகுப்புரை வழங்குவது எனக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாக கருதுகிறேன்.

நன்றியுடன்

**சகோ. பால்ராஜ் மோசஸ்.**

# முன்னுரை

அப்பா அவர்கள் அதிக மணி நேரம் ஜெபத்திலும், உபவாசத்திலும் தன் வாழ்நாளை செலவழித்தவர்.

ஆவியில் சஞ்சரிப்பதும், மரித்தோரை உயிரோடு எழுப்புவதும், தேவதூதர்களை, பரிசுத்தவான்களைப் பார்ப்பதும் பேசுவதும் அவருக்கு அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாய் இருந்தது.

இந் நாட்களில் இலகுவாய் கிடைக்கக் கூடிய தரிசனங்களை, இப்படிப்பட்ட ஆவிக்குரிய அனுபவங்கள் அந்நாட்களில் கிடைக்க கூடாத மிகவும் அரிதான காரியமாய் இருந்த நாட்களிலே,

அப்பா அவர்கள் காலை ஜெபத்திலும், மாலை ஜெபத்திலும், தினந்தோறும் பரலோகத்தைப் பற்றியும், தேவதூதர்களைப் பற்றியும், மரித்த பின் ஒரு மனிதனுடைய நிலைமை என்னவாய் இருக்கிறது என்றும் தான் கண்ட காரியங்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுவார்.

என்னுடைய தந்தை கற்று கொடுத்தவைகள் இன்றைக்கும் எனக்கு மிகவும் பிரயோஜனமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கிறது.

நானும், என் கணவரும், என் பிள்ளைகளும் இன்றைக்கு ஊழியப் பாதையில் இருப்பதற்கு அவர் தான் முக்கிய காரணம்.

அவர் மூலமாய் வெளிப்படுத்தின சத்தியங்களை நீங்கள் அறிந்துகொள்ள இந்தப் புத்தகம் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

வாசியுங்கள் தேவ ஆசீர்வாதம் பெறுங்கள். அதோடு இதற்கு ஓய்பு கொடுக்காமல் உங்களுக்கு தெரிந்த அறிமுகமான அனைவருக்கும் இதை வாசிக்கக் கொடுங்கள்.

கர்த்தருடைய ராஜ்யத்திற்கு உங்கள் மூலமாகவும் அநேர் வர இந்த புத்தகம் உதவியாக இருக்கட்டும்.

**மாறா நாதா,**

இப்படிக்கு,

**சகோதரி. M. பூமணி**

***5) அணிந்துரை டாக்டர் பால் தினகரன்***

# பரிந்துரை

*1978 ம் வருடம் எங்களுடைய பட்டணத்திற்கு ஒரு பிரசங்கியார் வருகிறார் என்று பரப்பரப்பாக பேசிக்கொள்ளப்பட்டது, பிரசங்கியார் என்றவுடன் என்னுடைய சிந்தனையில் அவர் இப்படித் தான் இருப்பார் என்ற ஒரு தோற்றம் உண்டானது. பொதுவாக இதுவரை சந்திக்காத ஒருவரைப் பற்றி கேள்விப்பட்டால், அவர் இப்படித் தான் இருப்பார் என்று நம் சிந்தையில் ஒரு தோற் றம் உருவாகும். அப்படிப் போன்ற ஒன்று இது. கடைசியில் அவர் கூட்டத்திற்கு வந்த அந்த நாளில் நான் அவரை சந்தித்த போது எப்படி ஒரு தோற்றம் என் சிந்தையில் தோன்றியதோ அதே போலவே அந்த பிரசங்கியார் தீர்க்கதரிசி து. ஜாண் ரபீந்திரநாத் அவர்கள் அங்கே காணப்பட்டார்கள்.*

*அதே வருடத்தில் இரண்டாவது முறையாக அவரை அந்த பட்டணத்திற்கு அழைத்திருந்தார்கள். ஆனால் அவரை அழைத்த அந்த நபருக்கு அவரைக் கொண்டு கூட்டங்களை தீர்மானித்தப்படி நடத்தவோ அல்லது அவரை தங்கவைக்கவோ முடியாத ஒரு நிலை ஏற்பட்டது.*

*பொதுவாக யாரையும் அழைத்து கூட்டங்கள் நடத்த ஆர்வமோ விருப்பமோ இல்லாதிருந்த நான், அவரை மிகுந்த விருப்பத்துடன் அழைத்து எனக்கு இருந்த அந்த ஒரே அறையில் தங்கவைத்து கூட்டங்களை நடத்தி முடித்தோம். அந்நாட்களில் நான் அந்த பட்டணத்தில் ஒரு சபைக்கு போதகராயிருந்தேன்.*

*அந்தக் கூட்டங்களுக்குப் பிறகு அவர் நம்முடைய குடும்பத்திற்கு மிகுந்த நெருக்கமானவராகவும் எங்களுக்கு ஒரு ஆவிக்குரிய தகப்பனுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவரை குடும்பமாக அப்பா என்றே அழைப்போம். மிகுந்த அன்போடும் கரிசனையோடும் ஆலோசனைகளை வழங்கி எங்களை நடத்தினார். அதன் பிறகு அவருடைய கூட்டங்கள் எங்கு நடந்தாலும் அங்கு சென்று அவருக்கு*

மொழிபெயர்த்தல் போன்ற காரியங்களில் ஈடுபட தேவன் கிருபை செய்தார்.

இயேசு வருகிறார் தோட்டத்தில் புது ஆலயக் கட்டிடம் கட்டப்பட்ட பின் ஒருநாள் ஒரு, இரண்டாவது சனிக்கிழமை உபவாசக் கூட்டத்திற்கு வந்து மேடையில் போய் அமர்ந்தேன். அமர்ந்தவுடன் என் உள்ளத்தில் ஒரு சத்தம் தொனித்தது. என் சேனாபதிகளில் ஒருவரோடு உன்னை இருபத்தைந்து வருடங்கள் நடக்க அனுமதித்திருந்தேன் என்று அந்த சத்தம் சொன்னது இந்த தலைமுறைக்கு அவரை தன் சேனாபதிகளில் ஒருவராக கர்த்தர் பாவித்தார் என்பது நிச்சயமான உண்மை. அதோடு நான் அப்பொழுது உணர்ந்தேன் அந்த வருடத்தோடு அவரை அறிந்து இருபத்தைந்து வருடங்கள் ஓடி மறைந்திருந்தன. எத்தனை ஆச்சரியமான தேவன்.

இன்றைய நிலைவரப்படி, உலகின் பெரிய தேவ தாசர்கள் பரலோகம் நரகம் இந்த இடங்களுக்கு கடந்து சென்று பார்த்து வந்த தங்கள் அனுபவங்களை அருமையான புத்தகங்களாக எழுதி வைத்துள்ளனர். ஏறக்குறைய அப்படிப்பட்ட புத்தகங்கள் எல்லாவற்றையும் வாசித்திருக்கிறேன்.


இவைகளில் முதல் முறையாக பரலோக, நரக ஆவிக்குரிய உலக அனுபவங்களை கேட்டு நான் தெரிந்துகொண்டது அப்பா மூலமாகத்தான். அவருடைய மேலான அனுபவங்கள், அருளூட்டும் பாடல்கள், அனுபவத்தை வசனத்தோடு கலந்து எளிமையாய் ஆனால் ஆழமாய் கொண்டுவரும் செய்திகள் இவைகளை மறக்க முடியாது.

அவருடைய இந்த புத்தகமும் வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் மிகுந்த ஆசீர்வாதத்தை கொண்டுவருவதாக என்று ஆசீர்வதிக்கிறேன்.

அன்புடன்,

**R. MOSES**
**FOUNDER**
**REVIVAL VINEYARD MINISTRIES**

# 1




## பரலோகில் அந்தஸ்து

என் எளிய ஊழிய அனுபவத்தில் வெறும் 11 பேரை மாத்திரம் தான் இயேசுகிறிதுவின் நாமத்தில் உயிரோடு எழுப்ப முடிந்தது.

சுமார் 30 வருடங்களுக்கு மேலாக கர்த்தருக்காக ஊழியம் செய்தாலும் இன்னும் அவருக்காக எதையாவது செய்யவேண்டும் சாதிக்க வேண்டும் என ஓடிக்கொண்டிருக்கின்றேன்.

ஒரு மனிதனின் ஆவி இயற்கையாகவோ அல்லது தன்னைத் தானே கொலை செய்தோ அல்லது மற்றவர்களால் கொலை செய்யப்பட்டோ அவன் சரீரத்தை விட்டு பிரியும் போதும் அதன் பின்பும் என்ன நடக்கிறது என்பதை என் ஊழிய அனுபவத்தில் நான் கற்றுக்கொண்டதும் தேவன் கிருபையாக எனக்கு கற்று கொடுத்ததுமான சத்தியங்களை நீங்களும் அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதுகிறேன்.

> ஒரு மனிதனின் ஆவி… அவன் சரீரத்தை விட்டு பிரியும் போதும் அதன் பின்பும் என்ன நடக்கிறது

நான் எழுதுகிறவைகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

மனந்திரும்பி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வேத நீதிகளை நிறைவேற்றி முடிவு பரியந்தம் நிலைத்திருந்தாலே போதும்.

*நீங்கள் மோட்சலோகம் செல்லும் தகுதியைப் பெறுவீர்கள்.*

*எனினும் இன்னும் சற்று கூடுதலாக நீங்கள் இவைகளைக் குறித்து அறிந்துக்கொள்ள வேண்டும். அதற்கு இந்த புத்தகம் நிச்சயம் உங்களுக்கு உதவும் என நான் நம்புகிறேன்.*

*என்னுடைய ஆசையும் அது தான்.*

*தேவனாகிய கர்த்தர் உங்களைக் கொண்டு செய்ய வேண்டும் என்று நினைத்தவைகளை நீங்கள் செய்து முடித்தவர்களாய் பூரணராக்கப்பட்ட கிறிதவர்களாய் அந்த பூரண மகிமைக்குள் பிரவேசிக்க வேண்டும்.*

*வேதம் இப்படி சொல்கிறது*

***கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டபடியே,***

***நீங்கள் இயேசுகிறிஸ்துவுக்குள்ளாய் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும், மற்றெல்லாவற்றிலும், சம்பூரணமுள்ளவர்களாக்கப்பட்டிருக்கிறபடியால்,***

***அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.***

***அந்தப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.***

***நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்.(1. கொரிந்தியர் 1: 4 - 8).***

*தமிழ் நாட்டில் மீன்பிடி கிராமமான இராமேஸ்வரத்தில் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து சிறுபான்மை இனத்தை சேர்ந்த டாக்டர்* **A. P.J.** *அப்துல் கலாம் அவர்கள் வறுமை, இல்லாமை, குறைவு, வசதியின்மை, எதிர்ப்பு இவைகளோடு போராடி ஜெயித்து ஒரு பெரிய விஞ்ஞானியாகவும் இந்திய நாட்டின் முதல் குடிமகன் என்ற பதவியாகிய ஜனாதிபதி என்ற பதவியையும் போராடி பெற்றார்.*

*சுமார் 100 கோடி மக்கள் உள்ள நம் இந்திய நாட்டில் அவர் பெயரை தெரியாதவர்களே இல்லை.*

*எல்லோரும் அவரை அண்ணாந்து பார்த்தார்கள்.*

**ஒரு ஜனாதிபதிக்கு இருக்கும் சலுகைகளைப் பாருங்கள்.**

- ★ ஆயிரக்கணக்கான பூக்கள் உள்ள ஒரு பெரிய பூந்தோட்டம்.
- ★ பல படுக்கை வசதிகளைக் கொண்ட பிரமாண்டமான மாளிகை.
- ★ எப்போதும் கூடவே மருத்துவக் குழு.
- ★ மிக உயரிய பாதுகாப்பு.
- ★ எல்லா வசதிகளும் கொண்ட தனி விமானம்.

இன்னும் ஏராளம் ஏராளம்.

இவைகள் பரிசாக கிடைக்கவில்லை. சீட்டுப் போட்டு குலுக்கி எடுத்தது போல தற்செயலாகவும் கிடைக்கவில்லை. கடுமையாக போராடி பல கிரயமும், தியாகமும் செலுத்தியதினால் கிடைத்த வெற்றி.

இவைகள் சில காலம் மட்டுமே, என்பது ஒருபுறம்.

ஆனால் நான் அழியாததைப் பேசுகிறேன். நித்தியமானதையும், யுக யுகமாய் முடிவில்லா நாம் போகப் போகும் இடத்தையும் குறித்துப் பேசுகிறேன்.

பரலோகத்திலும் பல அந்தஸ்துகள் இருக்கிறது என வேதம் நமக்கு சொல்லுகிறது. அதைக் குறித்தும் சொல்லுகிறேன்.

நீங்கள் மட்டும் சற்று உங்களை சுதாகரித்துக்கொண்டு சரியாக வேதம் சொல்லுகிறபடி உங்கள் அழைப்பை தெரிந்துக்கொண்டு வாழ்ந்துவிட்டால்

நீங்களும் பரலோகத்தில் நிரந்தரமான உயரிய அந்தஸ்துகளைப் பெற முடியும். மெத்தனமாகவோ அல்லது உங்கள் அழைப்பை புரிந்துகொள்ளாமலோ உதாசினமாக வாழ்ந்தால் ஒருவேளை பரலோகம் வந்தாலும், யோவான் நானகனைப் போல மிகச் சிறிய அந்தஸ்தில் தான் இருக்க முடியும்.

***“ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறார். (மத்தேயு 11 : 11).***

யோவான் நானகன் மிகப் பெரிய பாவம் ஒன்றும் செய்யவில்லை. விபச்சாரம் செய்தாரா, குடித்தாரா, கொலை செய்தாரா இல்லவே இல்லையே!

*பின்னை ஏன் ஒரு மிகப் பெரிய தீர்க்கதரிசிக்கு இந்த நிலை.*

***இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி*** ***(யோவான் 1 : 29).*** *என இயேசுவை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.*

*மேலும் அவர்*

***நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார்.***

***அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன் என்றான்.(யோவான் 1: 33, 34).***

*இந்த வெளிப்பாட்டை பிதாவிடத்திலிருந்து பெற்றவர். பிதாவும் பரிசுத்த ஆவியானவரும் ஆண்டவராகிய இயேசுவைக் குறித்து யோவானுக்கு வெளிப்படுத்தியிருந்தார்.*

*என்றாலும்,*

***வருகிறவர் நீர் தானா, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி இயேசுவிடத்தில் அனுப்பினான் (மத்தேயு 11 : 3 ).*** *எத்தனை துக்கம் பாருங்கள். பிதாவின் வெளிப்பாட்டை அவிசுவாசிக்கும்படி செய்தது எது?*

*உபத்திரவம்!*

*ஆம் யோவான் சிறைச்சாலையில் இருந்தார். (அதற்கு காரணம் நான் இப்போது சொல்ல விரும்பவில்லை. அதற்கும் பல காரணங்கள் உண்டு).*

*ஒருவேளை யோவான் நானகன் நான் தான் இயேசுவை உலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். இப்போதோ, அவர் என்னை மதிக்கவில்லை என நினைத்தாரோ தெரியவில்லை.*

*அல்லது*

*நான் சிறைச்சாலையில் இருக்கிறதை கேள்விப்பட்டதும் இயேசு*

*ஓடி வந்து என்னை விடுதலையாக்குவார் என நினைத்தாரோ அதுவும் தெரியவில்லை*

*எது எப்படியோ சோதனைகளும், பிரச்சனைகளும் ஒரு பாம்பைப் போல.. அதை சரியான விதத்தில் கையாளாவிட்டால் அது நம்மை அழித்துவிடும். அதை சாதனையாக்கினால்.. அது நம்மை காக்கும்.*

*ஒரு பெரிய தீர்க்கதரிசியும் பரலோகில் மிகச் சிறிய அந்தஸ்தில் இருக்கலாம்.*

*ஒரு சிறிய மனிதன் லாசருவைப்போல பரலோகில் பெரிய அந்தஸ்திலும் இருக்க முடியும்.*

***லாசருவைக் குறித்து வேதம் சொல்வதைப் பாருங்கள்.***

***ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.***

*ஒரு பெரிய தீர்க்கதரிசியும் பரலோகில் மிகச் சிறிய அந்தஸ்தில் இருக்கலாம்.*

***லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து,***

***அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று.***

***பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்;***

***ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்.*** ***(லூக்கா16: 19 23).***

*சற்று யோசியுங்கள்.*

*பசி, புண், நாற்றம், வீடோ, சொந்த பந்தமோ எதுவுமே இல்லை. ஆனால் முடிவு ஆபிரகாமின் மடி.*

இவர் என்ன ஊழியம் செய்துவிட்டார், இவ்வளவு பெரிய அந்தஸ்தைப் பெற.

பாருங்கள் பிரியமானவர்களே, இந்த பரிசுத்தவானாகிய லாசரு தனக்கு வந்த உபத்திரவத்திலும், வியாதியிலும், பசியிலும் தேவனை தூஷிக்கவோ மறுதலிக்கவோ செய்யாதபடி தேவனையே சார்ந்து வாழ்ந்தார்.

> பசி, புண், நாற்றம், வீடோ, சொந்த பந்தமோ எதுவுமே இல்லை. ஆனால் முடிவு ஆபிரகாமின் மடி.

இவருக்கும் ஐசுவரியவானுக்கும் மரித்த பின்பும் ஒரு தொடர்பு இருக்கிறதைப் பார்க்கும் போது இந்த ஐசுவரியவானை திருத்தும்படி தேவனின் அழைப்பை பூமியில் ஒருவேளை லாசரு பெற்றிருக்கலாம் என்று எண்ண தோன்றுகிறது அல்லவா?

பணக்காரர்களோ மற்றவர்களோ இந்த ஐசுவரியவானிடம் கிட்ட போக முடியாது. எனவே தேவன் லாசருவை அங்கே அனுப்பினார்.

இதைத் தடுக்க பிசாசு புண்களையும் மற்றும் உபத்திரவத்தையும் லாசருவுக்கு அனுப்பியிருக்கலாம். என்ன உபத்திரவம் வந்தாலும் கடைசிவரை லாசரு விசுவாசத்தில் உறுதியாய் இருந்தார்.

**ஆகவே பரலோகத்தில் லாசரு மிக உயரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டார். நாமும் இந்தப் பூமியில் தேவன் நாம் நிறைவேற்ற வேண்டும் என்று நமக்குக் கொடுக்கிற எந்த அழைப்புக்கும் விரோதமாக வருகிற எந்த பிரச்சனையையும் சகித்து மேற்கொண்டு, ஆண்டவருடைய சித்தத்தை மட்டும் நிறைவேற்றினால் போதும், நாமும் அந்தப் பெரிய அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் அன்று தனக்கு ஒன்றும் கிடைக்காத போது,

கடவுளுக்கு கண்ணிருக்கிறதா? ஏன் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தில் மனிதர்களைப் படைத்தார்? என புலம்பினதைக் கேட்டேன்.

**அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்.**

***அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால் கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்.***

***கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதினனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். (1 கொரிந்தியர் 7 : 20 , 22).***

*என வசனம் சொல்லுகிறபடி வாழ்ந்திருந்தாலும், தாழ்ந்திருந்தாலும் மன ரம்மியமாய் இருக்க மட்டும் கற்றுக்கொள்ளுங்கள்.*

*லாசருவைக் குறித்து ஆபிரகாம் லூக்கா 16 : 25 ல் சொல்லும் போது அவன் தீமைகளை அனுபவித்தான் என சொல்லுகிறார். லாசரு அனுபவித்த கஷ்டங்கள் பரலோகத்திற்கு தெரிந்திருக்கிறது. அதுபோல் நாமும் சிலவேளைகளில் அனுபவிக்கும் தீமை பரலோகத்திற்கும் தெரியும்.*

*நாம் நினைக்கிறோம் யாரும் காணவில்லை என.*

*லாசரு கூடிப் போனால் ஒரு பத்து வருடம் கஷ்டப்பட்டிருப்பாரா?*

*ஆனால் பலகோடி ஆண்டுகள் அவரால் ஆபிரகாமோடு, ஒரு பெரிய விசுவாசத் தந்தையோடு, தேவனுடைய சிநேகிதனோடு வாழ முடியும்.*

*★ஆபிரகாமோடு பந்தியில் புசிக்க முடியும்.*

*★ஆபிரகாமோடு இளைப்பாற முடியும்.*

*★ஆபிரகாமோடு உலாவ முடியும்.*

*★ஆபிரகாமோடு உறவாட முடியும்.*

*நாமும் இந்த பாக்கியத்தை அடைய முடியும்.*

*ஒருவேளை ஆபிரகாமின் ஒரே வாக்குத்தத்த மகனாகிய ஈசாக்குக்குக் கூட இந்த சிலாக்கியம் கிடைத்திருக்குமோ தெரியாது. எனவே என் அன்பிற்குரியவர்களே,*

*என்றாவது ஒரு நாள் நம்முடைய ஆவி இந்த சரீரத்தை விட்டு பிரியும் அல்லவா*

*அன்று*

- ★ *அது எங்கே போகும்?*
- ★ *எந்த அந்தஸ்தை பெறும்?*
- ★ *நியாயத்தீர்ப்புக்கு உட்படுமா?*
- ★ *அக்கினி தீர்ப்பாகிய நரகமா?*
- ★ *மகிமையின் தீர்ப்பா?*

*இந்த கேள்விகளுக்கெல்லாம் விடை இந்த புத்தகத்தில் இருக்கின்றது.*


*மிக சாதாரண ஒரு மனிதன் தன் கடின உழைப்பாலும் விடாமுயற்சியாலும் டாக்டர்* **A. P.J.** *அப்துல் கலாம், ஆபிரகாம் லிங்கன், தாமஸ் ஆல்வா எடிசன் இவர்களைப் போல மிகப் பெரிய அந்தஸ்திற்கும் உயர்வுக்கும் வர முடியும் இல்லையா.*

*ஒருவேளை அது அழியும் உலகை சார்ந்தது. எனினும் முயற்சித்தால் முடியும் என்ற நீதியைப் பாருங்கள்.*

*அதுபோலவே*

**பரலோக ராஜ்யத்திலும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு அந்தஸ்து இருக்கிறது.**

# 2




## பரலோகில் உயர் அந்தஸ்து பெற

***ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.(2பேதுரு 1: 10).***

***முதலாவது உங்கள் அழைப்பை தெரிந்துக்கொள்ளுங்கள்.***

*இதை அறியாததினால் தான் பெரிய குழப்பமே நடந்துக்கொண்டிருக்கிறது.*

*ஒவ்வொரு மனிதனும் தேவன் அவனை அழைத்த அழைப்பில் நிலைத்திருக்க வேண்டும்.*

*அழைப்பு என்றால் ஊழியர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் மட்டும் தான் என பலர் நினைக்கிறது மிகவும் தவறு.*

***பொதுவான அழைப்பு***

*★பரிசுத்தத்திற்கே அழைத்தார்.(1தெசலோனிக்கேயர் 4 : 7).*

*★தேவனுக்குள் ஒரே சரீரமாக இருக்க அழைத்தார் .(கொலோசெயர்3: 15)*

*★உபத்திரவங்களை சகிக்க அழைத்தார்.(1பேதுரு 2: 21, 1தீமோத்தேயு 6 : 12).*

*இப்படி பொதுவான அழைப்புகள் உண்டு.*

***தனிப்பட்ட அழைப்பு***

*புத்தி சொல்லுகிறது, ஊழியம் செய்வது, அதிலும் சபை ஊழியம், மிஷனெரி ஊழியம், சுவிசேஷ ஊழியம்*
*இதை விட ஒவ்வொரு தொழிலும் ஒரு அழைப்பே.*

விவசாயம், வியாபாரம், அரசாங்க உத்தியோகம், குடும்பம், இப்படி யார் யாருக்கு எப்படி எப்படியோ அப்படி தனி அழைப்பை தேவன் தனி தனியே ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார்.

இதில் முன்னேற்றமும் உண்டு.

ஒருவேளை 1கொரிந்தியர் 7: 21 ன்படி நீங்கள் ஒரு அடிமையைப் போல ஒரு தொழிலில் இருக்கலாம்.

வாழ்க்கை முதுவதும் அப்படியே இருக்க வேண்டும் என பொருள் இல்லை. உங்கள் உண்மை, உழைப்பு, நேர்மை இவைகளின் அடிப்படையில் உயர்வு வரும்.

> எந்த அழைப்பானாலும், நம் உண்மையையும் உத்தமத்தையும் நீடிய பொறுமையையும் பொறுத்து உயர்வுக்கு மாற்றப்படும்.

யோசேப்பு அடிமையாய் அழைக்கப்பட்டு உயர்த்தப்பட்டார்.

நாகமான் வீட்டில் ஒரு சிறுபெண் அடிமையாக அந்த வீட்டுக்குப் போனாள்.

நாகமானுக்கு சுகம் கிடைத்ததும் எப்படிப்பட்ட கனம் அந்த சிறுபெண்ணுக்கு உண்டாயிருக்கும்.

ரூத், எஸ்தர் போன்றோரும் இன்னும் அநேகரும் இந்த அடிமை என்கிற அழைப்பில் சரியாய் வாழ்ந்து பின்பு தேவனால் உயர்த்தப்பட்டார்களே!

எந்த அழைப்பானாலும், நம்முடைய உண்மையையும் உத்தமத்தையும் நீடிய பொறுமையையும் பொறுத்துத்தான் உயர்வுக்கு மாற்றப்படும்.

நான் திருமணமாகி 55வது நாளில் என் மனைவி மரித்துப் போனதினால் மிகவும் மனமுடைந்து போனேன்.

நான் செய்துகொண்டிருந்த ஆசிரியர் பணியை ராஜினமா செய்தேன்.

இனி என்ன செய்வது என்ற கேள்வி எனக்குள் வரவே தமிழ் நாட்டில் கோயம்புத்தூர் என்ற இடத்தில் இருக்கும் மருதமலை என்ற இடத்தில் கண்ணீரோடு ஜெபித்துக்கொண்டிருந்தபோது ஆண்டவர் முகம் முகமாய் மதிய வேளையில் தோன்றி பல காரியங்களைப் பேசினார்.

பின்பு! அவர் சொன்னார் பெங்களூர் என்ற பட்டணத்தில் இருந்து மைசூர் செல்லும் வழியில் 18 வது மையிலில் சுவிசேஷ ஆசிரமம் என்று ஒரு ஆசிரமம் இருக்கிறது

நீ அங்கே போ!

நீ செய்ய வேண்டியது அங்கே உனக்கு சொல்லப்படும் என்று ஆண்டவர் சொன்னார் .

அதன்படியே மிகுந்த துக்கத்தோடும் கண்ணீரோடும் அங்கே சென்றேன்.

அதை நடத்திக்கொண்டிருந்த சேஷரெத்தினம் என்ற அன்புத் தாயார் பாபு(மகனே) நீங்கள் வருவீர்கள் என கர்த்தர் எனக்கு நேற்று சொன்னார் வாருங்கள் என அன்போடு அழைத்து நான் நிறைவேற்ற வேண்டிய ஊழியத்தை எனக்குச் சொன்னார்கள்.

அதன்படியே சுமார் 9 வருடம் 8 மாதங்கள் ஒரு அடிமையைப் போல் அங்கே ஊழியம் செய்தேன்.

முதல் முதல் கர்த்தர் எனக்கு ஒரு அடிமையின் அழைப்பைத்தான் கொடுத்தார்.

முதல் முதல் கர்த்தர் எனக்கு ஒரு அடிமையின் அழைப்பைத்தான் கொடுத்தார்.

கர்த்தர் முன்பே சொல்லியிருந்தபடியால் எனக்கு ஒன்றும் பெரிதாக தோன்றவில்லை.

தினமும் அதிகாலையில் 3 மணிக்கு எழுந்திருந்து 1 மணி நேரம் தனியாக ஜெபிப்பேன். 4 மணியிலிருந்து 5 மணி வரை காலையில் ஆசிரமத்தில் இருக்கும் பெரியவர்களுக்கு ஜெபிக்க நான் தான் பெருக்கி பாய் விரித்து கொடுக்க வேண்டும்.

காலை 5 மணிக்கு பிள்ளைகளுக்கு சமைக்க சமையலறைக்குப் போவேன் 7 மணிக்கு எல்லா சிறுபிள்ளைகளையும் குளத்திற்கு அழைத்துப் போய் குளிக்க வைத்து அவர்கள் சிறுபிள்ளைகள் என்பதால் அவர்கள் வஸ்திரங்களை துவைத்து கொடுப்பேன். பின் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்து பள்ளிக்கு அனுப்பிவிட்டு,

அலுவலகப் பணிகளை தொடங்குவேன். கடிதங்கள் ஒவ்வொன்றுக்கும் கையால் பதில் எழுதுவேன்.

மொழிபெயர்ப்பு, ஆராதனை, விசேஷித்த ஜெபம் என ஏதாவது

ஒரு காரியம். என் அட்டவணையில் இல்லாததும் நடந்து கொண்டேயிருக்கும். அதையும் செய்து முடிக்க வேண்டும்.

ஆகாரம் பரிமாறி, பாத்திரம் கழுவி முடிக்க பிள்ளைகள் பள்ளியிலிருந்து வருவார்கள். அவர்கள் காரியங்களை முடித்து,

அடுத்த நாளுக்காக 85 அடி ஆழத்திலிருக்கும் எங்கள் கிணற்றுத் தண்ணீரை கயிறு கட்டி இறைத்து பாத்திரங்களில் நிறைப்பேன். சமையலுக்கும், வயதான ஐயாவுக்கும், அம்மாவுக்கும் குளிப்பதற்கும் தண்ணீர் இறைப்பேன். பின்பு காட்டுக்கு சென்று விறகு பொறுக்க வேண்டும்.

இதோடு சந்தியா ஜெபம், இரவு சாப்பாடு என எல்லாம் முடிய இரவு 9 மணி சில நேரம் 10 மணியும் ஆகும்.

**சுமார் 10 வருடம் ஒரு அடிமையைப் போல் உழைத்தேன் அது தான் என் அழைப்பு.**

நிறைய பேர் இதில் தோற்றுவிடுகிறதினாலே தொடர்ந்து அடிமையாகவே இருக்கிறார்கள்.

அல்லது அழைப்பை விட்டு மற்ற மனிதர்களைப் பார்த்து தனக்காக ஒரு வழியை தெரிந்து எடுத்து வழி விலகிப் போகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் ஆபத்தானவர்கள் மட்டும் அல்ல பரலோகத்திற்கு ஒருவேளை வந்தாலும் பூரண மகிமை கிடைக்காது.

அவர்கள் ஆவி பிரியும் போது மிகவும் வேதனைப்படும். பரலோகில் துக்கம் இல்லை என்பது மெய் தான். ஆனால் நாம் இங்கே செய்கின்ற ஒவ்வொரு காரியமும் அங்கே நினைவில் இருக்கும்.

லூாக்கா 16 : 24 ம் வசனத்தில் ஐசுவரியவான் நரகத்தில் தன் குடும்பத்தை நினைக்கிறான்.

பரலோகத்தில் இருக்கும் ஆபிரகாம் அதைச் சரியாய் பார்த்து நினைவுகூர்ந்து சொல்கிறார்.

மகனே நீ சம்பிரமமாய் வாழ்ந்தாய் என்று.

இப்போது நினைக்கிறதினாலோ துக்கப்படுகிறதினாலோ எந்த பயனும் வரப்போவதில்லை

அழைப்பு மிக முக்கியம்.

**இரண்டாவதாக பரலோகத்தில் நல்ல அந்தஸ்துக்களை பெற நமக்கு வரும் பாடுகளிலும் துக்கங்களிலும் உபத்திரவங்களிலும் சந்தோஷமாய் இருக்க வேண்டும்.**

லாசரு தீமையை சகித்தான் என ஆபிரகாம் சொல்லுகிறார்.

பவுல் தீமோத்தேயுக்கு எழுதும் போது நீயோ குமாரனே தீங்கு அனுபவி என எழுதுகிறார்.

தீமையை சகித்தல் என்பதற்கு

ஒரு இளம் பெண் ஒரு குழந்தையைப். பெற்றெடுக்கும் மகிழ்ச்சியில் பிரசவ வலி எவ்வளவு கடுமையாய் இருந்தாலும் அதை சந்தோஷமாய் சகிக்கிறாளே அதை ஒப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு குழந்தைக்கு தாயாவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

ஒரு சிறு தலைவலியை கூட தாங்க முடியாத அந்தப் பெண் பிரசவ வலியை எளிதாய் தாங்குகிறாள். காரணம் தனக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்ற சந்தோஷத்தினால் தானே.

★ அதிக இரத்தம் வெளியேறும்

★ அதிக பெலன் போய்விடும்

★ தன் அழகு குறையும்

★ வாழ்வா, சாவா என தெரியாத ஒரு சூழ்நிலை உருவாகும்.

என்றாலும்,

அந்தக் கஷ்டத்தை சகிக்கிறாளே ஒரு பெண்ணின் சகிப்புத் தன்மை எத்தனைப் பேருக்கு மகிழ்ச்சியையும், ஆசீர்வாதத்தையும், சந்தோஷத்தையும், சுதந்தரத்தையும், அந்தஸ்தையும், பிரயோஜனத்தையும் தருகிறது பாருங்கள்.

> ஒரு தாய் சமையலறையில் புகையிலும் சரீர வலியிலும் படும் கஷ்டம் சாப்பாட்டு மேஜையில் சந்தோஷப்படவும், சரீரம் ஆரோக்கியமாய் இருக்கவும் பயன்படுகிறதே.

நான் 10 வருடம் பட்ட பாடுகள் எத்தனை பேருக்கு ஆசீர்வாதமாய் இருந்தது.

அதைத் தான் பவுல் உங்களுக்காக பட்ட பாடுகள் என சொல்கிறார்.

**என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்;** **(கலாத்தியர் 4 : 19).**

என எழுதுகிறார். அவர் பட்ட பாடுகள் தான் நமக்கு இன்று பல ஆசீர்வாதங்களை கொண்டு வந்தது.

ஒரு தாய் சமையலறையில் புகையிலும், சரீர வலியிலும் படும் கஷ்டம் சாப்பாட்டு மேஜையில் அநேகர் சந்தோஷப்படவும், சரீரம் ஆரோக்கியமாய் இருக்கவும் பயன்படுகிறதே.

*அதேபோல நீங்கள் கிறிஸ்து இயேசு அழைத்த அழைப்பிற்காக படும் கஷ்டம் பலரை ஆசீர்வாதமடைய செய்கிறது. அதோடு உங்கள் அந்தஸ்து பரலோகில் உயர்ந்திருக்கிறது.*

*பவுல் தான் பட்ட கஷ்டங்களைப் பட்டியலிடுகிறார் பாருங்கள்:*

1) நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்
2) அதிகமாய் அடிபட்டவன்
3) அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன்
4) அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.
5) யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்;
6) மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்
7) ஒருதரம் கல்லெறியுண்டேன்
8) மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன்
9) கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.
10) அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்
11) ஆறுகளால் வந்த மோசங்கள்
12) கள்ளரால் வந்த மோசங்கள்
13) என் சுயஜனங்களால் வந்த மோசங்கள்
14) அந்நிய ஜனங்களால் வந்த மோசங்கள்
15) பட்டணங்களில் உண்டான மோசங்கள்
16) வனாந்தரத்தில் உண்டான மோசங்கள்
17) சமுத்திரத்தில் உண்டான மோசங்கள்
18) கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்கள்
19) பிரயாசங்கள்
20) வருத்தங்கள்
21) அநேமுறை கண்விழிப்புகள்
22) பசி
23) தாகம்
24) அநேகமுறை உபவாசம்
25) குளிர்
26) நிர்வாணத்திலும் இருந்தேன்.

*என்று 2கொரிந்தியர் 11 : 23 — 27 லில் சொல்லிவிட்டு முடிவில் அவர் சொல்லுகிறார். இவைகளில் நான் பிரியமாயிருக்கிறேன் என்று.*

மேலும் ***அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.*** ***(2. கொரிந்தியர் 12 : 10).***

*பாருங்கள்!*

*நன்மை செய்வதால் வரும் பாடுகளில் எந்த மனிதன் பிரியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறானோ அவனே தேவ ராஜ்யத்தில் உயரிய அந்தஸ்தைப் பெறுவான்.*

*அப்போஸ்தலர் 5: 40, 41ல் பேதுருவை வரவழைத்து ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக அடித்தபோது பேதுரு சந்தோஷமடைந்தார்.*

*இது அவரால் முடிந்தது. காரணம் இதன் இரகசியத்தை அவர் அறிந்திருந்தார்.*

*மேலும் பவுல் கூறுவதைக் கேளுங்கள்.*

***துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்.** (2கொரிந்தியர் 6 : 10).*

***மிகுந்த தைரியத்தோடே உங்களுடன் பேசுகிறேன்; உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.** (2கொரிந்தியர் 7 : 4).*

***அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.** (2கொரிந்தியர் 12 : 9).*

*அதேபோல மக்கெதோனியா சபையாரின் முதிர்ச்சியைப் பாருங்கள்.*

***அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.** (2கொரிந்தியர் 8 : 2).*

*ஆம் அவர்கள் தரித்திரராய் இருந்தும் எப்பொழுதும் பரிபூரண சந்தோஷத்தினால் நிறைந்திருந்தார்கள்.*

*தரித்திரமோ, உபத்திரவமோ அவர்கள் சந்தோஷத்தை கெடுக்கவோ, குறைக்கவோ முடியவில்லை.*

*நாமும் நமக்கு வருகிற உபத்திரவங்களிலும், பாடுகளிலும், நிந்தைகளிலும் சந்தோஷமாகவும் இருக்க முடியும்.*

*துக்கத்தோடும் எரிச்சலோடும் கண்ணீர் வடித்துக்கொண்டும் இருக்க முடியும்.*

***ஆனால்...***

## *நம் துக்கம் எதைச் சொல்லுகிறது தெரியுமா?*

**சந்தோஷமாய்**
**இருந்தால் பூரண அந்தஸ்து உண்டாகும்.**
**துக்கத்தோடு**
**அவைகளை சகித்தால் நாம் தோற்றுப் போவோம்.**

- ★ *ஆண்டவர் என்னை நேசிக்கவில்லை.*
- ★ *ஆண்டவர் என்னை காணாதவர் போல இருக்கிறார்.*
- ★ *இந்தப் பிரச்சனை எனக்குத் தேவையில்லை.*
- ★ *என் ஜெபம் கேட்கப்படவில்லை.*
- ★ *நான் ஜெபித்தும் எந்தப் பிரயோஜனமும் இல்லை.*

*இப்படி தோல்வியான காரியங்களை உலகித்திற்கும் பிசாசுக்கும் முன்பாகவும், பரலோகத்திற்கும் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.*

*ஒருவேளை வார்த்தையினால் சொல்லாவிட்டாலும் நம் முகமே சாட்சி கொடுக்கும்.*

*லாசரு தனக்கு வந்த எல்லா உபத்திரவத்தையும் சகித்தார்.*

***மூன்றாவதாக! நாம் பரலோகில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற ஆண்டவருடைய ராஜ்யத்தின் விருத்திக்காக எதையாவது செய்ய வேண்டும்..***

*நான் விவசாயம் செய்யத்தான் அழைக்கப்பட்டிருக்கிறேன். அது தான் என் அழைப்பு என நாம் விவசாயத்தை மட்டும் செய்துவிட்டு சும்மா இருக்க முடியாது.*

*வியாபாரமானாலும், தொழிலானாலும், வேறு எந்த உத்தியோகமானாலும் அதோடு பரலோக ராஜ்யத்திற்காகவும் நீங்கள் கட்டாயம் ஏதாவது ஒரு விதத்தில் உழைக்க வேண்டும்.*

*இதற்காக தனியாக ஆண்டவர் எனக்கு சொன்னால் தான் நான் செய்வேன் என நினைக்கவோ சொல்லவோ முடியாது.*

*மல்கியா 3: 17 18 ல் கர்த்தர் சொல்லுகிறார்.* ***என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.***

***அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள்.***

*தன்னுடைய சம்பத்தைச் சேர்ப்பேன் என கர்த்தர் சொல்லும் அந்த கடைசி நாளில் இந்தப் பூமியிலே தங்களுடைய அன்றாட பணி களோடுகூட கர்த்தராகிய தேவனுடைய ராஜ்யத்தின் விருத்திக்காக சேவை செய்கிற ஒவ்வொருவரும் வித்தியாசமாய் பிரிக்கப்பட்டு உயரிய அந்த தைப் பெறுவார்கள். இது சகல கோடி மக்களுக்கும் முன்பாக இவர்கனள கர்த்தராகிய தேவன் வித்தியாசப்படுத்தி காண்பிப்பார். மேலும் ஒரு பயங்கரமான வார்த்தையை கேளுங்கள்.*

***மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்.***

***மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் (அறிக்கை பண்ணாதவன்) எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.(மத்தேயு 10: 32, 33).***

என சொல்லப்பட்ட பயங்கரமான வார்த்தையை நாம் மறக்க முடியாது.

இன்னும்!

மத்தேயு 7 : 23 ல் நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை எனவும் சொல்லுகிறார்.

★ இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்.(ஏசாயா 49: 16).

★ நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்றும்.

★ தாய் தந்தை கைவிட்டாலும் நான் கைவிடமாட்டேன்.(சங்கீதம் 27: 10) என்றும் சொன்னவர்தான் இதையும் சொல்லுகிறார்.

ஆண்டவர் மாறி மாறி பேசுகிறாரா. இல்லை, இல்லவே இல்லை.

அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்.

நீங்களும் நானும் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கிறது மெய்தான்.

★ புதிய உடன்படிக்கை நமக்கு உண்டு என்பதும் உண்மைதான்.

★ புதிய சட்டத்திட்டங்களும் உண்டு இல்லையா,

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தவர்கள் எல்லாரும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய தேவையில்லை.

ஆனால் புதிய ஏற்பாட்டில் எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டும். இனவாரியாக, மொழிவாரியாக, தேசம் வாரியாக தேசத்தை தேவன் பக்கம் திரும்பும் நேரம் இதற்கு தேவன் நம்மைத் தான் நம்பியிருக்கிறார்.

இதற்க்காக பிதாவும், கிறிஸ்துவும், மகா பரிசுத்தமுள்ள ஆவியானவரும் செய்த தியாகம் மிகவும் பெரியது. அது வார்த்தையால் விவரிக்க முடியாது.

அவர் பெற்றுக்கொடுத்த

★ இரட்சிப்பை பாருங்கள்.

★ விடுதலையைப் பாருங்கள்.

★ பாவ மன்னிப்பைப் பாருங்கள்.

★ இருந்த இடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளும் சுகத்தைப் பாருங்கள்.

★ பரலோகத்தில் தேவன் நமக்கு கொடுத்த அதிகாரத்தைப் பாருங்கள்.

இவை அனைத்தும் இலவசமாய் வரவில்லை. தேவனாகிய

கர்த்தர் விலைக் கிரயம் செலுத்தி பெற்றுக் கொடுத்தது.

அதற்கு ஈடாக பரலோகம் எதிர்பார்க்கிறது ஒன்றே ஒன்றைத் தான்.

அது தான் ஆத்தும ஆதாயம்.

ஒரு நாள் ஊட்டியில் உள்ள தொட்டபெட்டா என்ற இடத்தில் நான் ஜெபித்துக்கொண்டிருந்தபொழுது ஆண்டவராகிய தேவன் எனக்கு தரிசனமானார்.

அவர் சொன்னார்.

இவைகளைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் நான் கொடுத்திருக்கும்

★ நேரம்

★ சரீர சுகம்

★ அந்தஸ்து

★ குடும்பம்

★ சமுதாயம்

இவைகளைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என சொன்னார். இதைக்கேட்டு நான் மிகவும் கலங்கிப் போனேன்.

தேவன் கிருபையாய் கொடுக்கிற நேரத்தை வீணடிப்பதும் தவறு, வேலை, வேலை என பணம் சம்பாதிப்பதிலே மட்டும் குறிக்கோளாயிருந்து தேவனாகிய கர்த்தரோடு நேரத்தை செலவிடாமல் அலைவதும் தவறு.

கர்த்தருக்கென்று கொடுக்கும் நேரத்தை ஒவ்வொரு நாளும் கொடுத்தே தீர வேண்டும்.

அது போலத் தான் சரீர சுகம். நம் பெலன் எதற்காக செலவளிக்கப்படுகிறது?

நீங்கள் வாழும் சமுதாயத்தில் எந்த அந்தஸ்தோடு வாழ்கிறீர்கள்? எவைகளையெல்லாம் சாதிக்கிறீர்கள்? கிறிஸ்துவுக்காக இதை எப்படி பிரயோஜனப்படுத்தினீர்கள்?

காயீனிடம், உன் சகோதரன் எங்கே என்றும், ஆபிரகாமிடம் உன் மனைவி எங்கே என்றும் கேட்ட அதே ஆண்டவர்.

உங்களிடமும் உங்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் குறித்தும் கணக்குக் கேட்பார்.

கணவன் சரியில்லை என சொல்லியோ? மனைவி சரியில்லை, கீழ்ப்படியவில்லை, சண்டைக்காரி என்றெல்லாம் சொல்லியோ? தப்பித்துவிடலாம் என மட்டும் நினைத்துவிடாதீர்கள்.

அது நடக்காது.

***மனுஷர் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நியாயத்தீர்ப்பின் நாளிலே*** *(சரீரத்தை விட்டு ஆவி பிரிந்து மோட்சலோகம் போகும் போது)*

***கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*** *என* ***மத்தேயு12: 36 ல் இயேசு சொல்லுகிறார்.***

*மேலும்* ***எபிரெயர் 4: 11, 12ல் ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்.***

***தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.***

*இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் அவர் பார்க்கிறார்.*

*சகலமும் அவர் கண்களுக்கு நிர்வாணமாயும், வெளியரங்கமாயும் இருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என பார்க்கிறோம்.*

***அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும்.(1யோவான் 4 : 5).***

***ஆதலால் நம்மில் ஒவ்வொருவருனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.(ரோமர் 14 : 12 ).***

***எப்படியெனில், பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது.(மத். 18 : 23)***

*என்ற காரியம் உங்கள் மனதில் உறைக்கிறதா?*

*இதே காரியத்தை சற்று வித்தியாசமாக லூக்கா 16 : 2 ல் எழுதுகிறார்.*

*அதுபோலத் தான் நாம் வாழ்கிற சமுதாயத்திற்காகவும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*

*நீங்கள் வாழும் தேசம், சமுதாயம் இரட்சிப்படைய என்ன செய்தீர்கள்?*


*உங்கள் ஊருக்காக எவ்வளவு நேரம் ஜெபித்தீர்கள்?*
*குறைந்தபட்சம்*

*ஊழியர்களையாவது அழைத்து சுவிசேஷம் அறிவித்தீர்களா?* *ஆலயத்திற்காவது அழைத்து போயிருக்கலாமே! ஒன்றுமே செய்யாமல் பரலோகத்தில் தேவாதி தேவனை எப்படி சந்திக்கப் போகிறீர்கள்?*

***ஒருவனும் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங் கையோடே வரக்கூடாது*** *என வேதம் சொல்லுகிறதே!* ***(யாத்திராகமம் 34 : 20, உபாகமம் 16 : 17).***

சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! ஆயத்தமாகுங்கள்!

# 3




## ஆவி, ஆத்துமா, சரீரம்

பிதாவாகிய தேவனின் சிறு துளித்தான் மனிதனின் ஆவி. பிரசங்கி 12 : 7 ல் ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்பும் என வாசிக்கிறோம்.

எல்லாரும் புரியும்படியாய் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் **சரீரத்தை விட்டு பிரிந்த ஆவி** என இந்தப் புத்தகத்திற்கு தலைப்பு கொடுத்திருக்கிறேன்.

ஆனால் உண்மையில் ஒரு மனிதனின் ஆவி தண்டனைப் பெற முடியாது. எந்த மதத்தினரானாலும், எந்த ஜாதியினரானாலும், எந்த மொழி பேசும் மக்களானாலும் **மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. (நீதிமொழிகள் 20 : 27).**

அது எந்த சேதமும் இல்லாமல் தன்னைத் தந்த தேவனிடத்திற்கே போய் சேர்ந்து விடும்.

**தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.(ஆதியாகமம் 2 : 7)**

மண்ணினால் ஒரு உருவத்தைச் செய்து தேவன் அதின் மேல் ஊதினார் அவன் ஜீவாத்துமாவானான்.

பிதாவின் ஆவி உள்ளே சென்று ஆத்துமாவை உருவாக்கியது. எனவே மனிதன் மரிக்கும் போது சரீரம் அழிந்துப் போகும். ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கே போய்விடும்.

ஆத்துமா தான் உயர்வோ தாழ்வோ அடைந்து நித்திய

நரகத்திற்கோ அல்லது பரலோகத்தில் நிறந்தரமாய் வாழவோ முடியும்.

வேதம் சில இடத்தில் அதை உள்ளான மனிதன் எனச் சொல்லுகிறது. அந்த ஆத்துமா தான் நன்மையோ தீமையோ அடைய முடியும். ஆவி அல்ல.

**ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்.**

| ஆவி | ஆத்துமா |
|---|---|
| வளர்ச்சி இல்லை | நாளுக்கு நாள் வளரும் |
| நியாயத்தீர்ப்பு இல்லை | நியாயந் தீர்க்கப்படும் அல்லது மகிமையின் தீர்ப்படையும் |
| மரிக்காது | வியாதிப்படும். (சங்கீதம் 41: 4).சரீரம் உயிரோடு இருக்கும்போதே ஆத்துமா மரித்துவிடும் வாய்ப்பு இருக்கிறது.(வெளி.3: 2)(2தீமோத்தேயு 5: 6) |
| உயர்வோ தாழ்வோ இல்லை | பரலோகில் மிக உயரிய இடத்திற்கோ மிக தாழ்ந்த இடத்திற்கோ செல்லும் அல்லது நரகத்தில் கூட தள்ளப்படுவது இந்த ஆத்துமா தான். |
| ரூபம் இல்லை | ரூபம் இருக்கிறது. |

அப்படியானால் ஆவியின் வேலை என்ன?

ஆவி இல்லாமல் ஆத்துமாவால் செயல்பட முடியாது. அது தான் பரலோகத்தோடு தொடர்பு வைத்து பிதாவின் ஆவியானவரோடு இணைந்து மனிதனை நல்வழி நடத்துகிறது.

தேவனை நினைக்கவும் நினைவுகளையும், தேவ வெளிப்பாடுகளையும் ஆத்துமாவிற்கு கொடுக்கிறது. வளர்ச்சி அடையவும் ஆவியே உதவுகிறது.

நூற்றுக்கும் அதிகமான முறை என் சரீரத்தில் இருந்த என் ஆன்மா வெளியே வந்து ஆவியில் சஞ்சரித்திருக்கின்றேன்.

ஆவி தேவனுடைய ஒரு சிறு பிம்பமாய் இருக்கிறது.

அது வெளியே வரும் என் ஆன்மாவை கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்கு கொண்டு சென்று பத்திரமாய் பாதுகாத்து திரும்ப என் சரீரத்துக்குள் கொண்டு வருவதை பல தடவைப் பார்த்திருக்கின்றேன்.




ஒரு விண்கலத்தைப் பாருங்கள், அதில் முக்கியமானது அதில் உள்ள கருவிதான். அதை பல லட்சம் கிலோ மீட்டர் தொலைவிற்கு எடுத்துச் செல்ல ஒரு அதிவேக என்ஜின் பொருத்தப்பட்டிருக்கும். அடுத்தது அதின் வெளி அமைப்பு கணினி இம் மூன்றும் சேர்ந்தது தான் ஒரு ராக்கெட் தான் தயாரிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற தேவை.

எனினும் கணினியோடு பொருத்தப்பட்ட அந்த கருவிதான் முக்கியமானது. அது செயல்படுவதற்கு அதின் இலக்கை அடையவேண்டும்.




அந்தக் கருவி எத்தனை விலை உயர்ந்தது. அது எத்தனை நவீனமாயினும், அது சேர வேண்டிய தொலைவில் சென்று அடைந்தால்தான் பிரயோஜனம் இல்லையா?

அதுபோல ஒவ்வொரு மனிதனின் ஆன்மாவும் தான் அடைய வேண்டிய இலக்கை அடைந்தால் தான் அது பூரணப்படும். ஆன்மாவின் பணி அங்கு தான் முழுமை அடைகிறது.

இதற்கு சரீரமாகிய வெளி அமைப்பும் ஆவியாகிய இயந்திரமும் தேவைப்படுகிறதல்லவா?

**எனவே உங்கள் ஆன்மாவைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.**



**மனிதர்கள் மரிக்கும் போது**

★ சிலர் வேதனையில் துடிப்பார்கள்.

★ சிலர் பயத்தினால் காணப்படுவார்கள்

★ சிலர் மிகுந்த சமாதானமாய் இருப்பார்கள்

★ சிலர் சரீரம் களைத்துப்போய் இருப்பார்கள் அவர்களைப் பார்க்கவே அகோரமாய் இருக்கும்.


**மரணங்கள் பலவிதம்.**

சிலர் வலியினால் துடித்து கதறி மரித்தாலும். அவர்கள் கர்த்தருக்குள் மரித்தால் அவர்கள் முகம் மரிக்கும்போது மிகவும் பிரகாசமாய் இருக்கும்.

எப்படிப்பட்ட மரணம் சம்பவித்தாலும் பரிசுத்தாவியின் பூரண அபிஷேகம் இருந்தால் மட்டுமே அங்கே நடப்பதை அறிய முடியும்.

மாம்சக் கண்களால் அதை அறிய முடியாது.

# 4




## ஒரு மனிதனில் இருந்து ஆவி பிரியும் போது.

பரிசுத்தவானாய் இருந்தால் அங்கே அவனை அழைத்துச் செல்ல தேவனுடைய விசேஷித்த தூதர்கள் வந்துவிடுவார்கள்.

★ அவன் தேவன் அழைத்த அழைப்பில் உண்மையாய் இருந்து சரியாய் அதை செய்திருக்க வேண்டும்.

★ தனக்கு தேவன் கொடுத்த குடும்பத்தில் அவன் உண்மையாய் இருந்திருக்க வேண்டும்.

★ வேத வசனத்தின்படி வாழ்ந்திருக்க வேண்டும்.

★ மனச்சாட்சி **(2கொரிந்தியர் 4 : 2)** வசனத்தோடு இணைந்து செயல்பட்டிருக்க வேண்டும்.

**1கொரிந்தியர் 11: 31 ன்படி நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.**

தினமும் படுக்கைக்கு செல்லும் முன் தன்னைத் தான் ஆராய்ந்து, நிதானித்து (வசனத்தின்படி) அறிய வேண்டும்.

ஏன் நான் வேத வசனத்தின்படி என்று அடிக்கடி எழுதுகிறேன் என்றால் நம் மனச்சாட்சியோ, வாழ்க்கையோ, அழைப்போ, வேறு எந்த காரியமோ ஆனாலும் சரி வசனம் தான் சரியான வழியில் நம்மை நடத்தும்.

★ இன்று கொலை செய்கிறவர்களும் தாங்கள் செய்கிறது சரியே என சொல்லுகிறார்கள்.

★ திருடுகிறவர்களும், லஞ்சம் வாங்குகிறவர்களும், துன்மார்க்கமாய் வாழ்கிறவர்களும், ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி

*நான் செய்தது சரியே என முடிவுக்கு வருகிறார்கள்.*

**கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்கும் காலம் வரும்(யோவான் 16 : 2 ).**

*என வசனம் சொல்லுகிறது .*

*விபசாரக்காரர்களும், பொய்யரும் இன்று ஏதோ ஒரு காரணத்தை சொல்லித்தான் நான் செய்தது சரி என வாதாடுகிறார்கள்.*

*வேத வசனத்தோடு ஒவ்வாத மனச் சாட்சி எல்லாம் நியாயந்தீர்ப்பு நாளில் அடிப்பட்டுப் போகும்.*

*என் தகப்பனார் மரணப் படுக்கையில் இருக்கிறார் என எனக்குச்செய்தி வந்த போது, நான் உடனே புறப்பட்டு போனேன்.*

*அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதை பார்த்த என் மனம் மிகவும் வேதனை அடைந்தது.*

*சுமார் 15 நாட்கள் உபவாசமிருந்து மிகவும் அழுது ஜெபித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் இரவு கர்த்தர் என் தகப்பானரைக் குறித்து பேசினார்.*

*சுயநீதியை விட்டால் என் மகிமையைக் காண்பான் என சொன்னார்.*

*நான் அதைச் சொன்ன போது அழுது அதை ஏற்றுக்கொண்டார்.*

*அதுவரை கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர் இப்பொழுது அமைதலானார். மிகுந்த அமைதலும் சமாதானமும் உண்டாயிற்று.*

*அதன் பின்பு தேவ தூதர்களையும், பரலோக காட்சிகளையும் கண்டார் .*

*அவர் எடுத்துக்கொள்ளப்படும் வேளை வந்தது.*

*பிதாவே உம் கைகளில் இவர் ஆவியை ஒப்படைக்கின்றேன் என நான் சொன்னதும் அவர் ஆவி மிகுந்த சமாதானமாய் பிரிந்தது.*

*அந்த அறை முழுவதுமாய் வெளிச்சம் பிரகாசித்தது. தேவதூதர்கள் வருவதையும் என் தகப்பனாரை அழைத்து செல்லுவதையும் கண்டார்.*

*ஆம். இதேபோல பல நீதிமான்களின் மரணங்களைப் பார்த்திருக்கின்றேன்.*

*அவர்கள் முடிவு சமாதானமாய் இருந்தது. அதே நேரம் கர்த்தருக்குப் பயப்படாத சிலரின் ஆவி பிரிந்த போது நான் நேரடியாய் பார்த்திருக்கின்றேன். அது மிகவும் பயங்கரமாய் இருக்கும்.*

தமிழ் நாட்டில் ஒரு மலைப் பிரதேசத்தில் நான் கண்ணீரோடு பிரசங்கம் செய்வதை அங்கிருந்த முக்கியமானவர்களில் ஒருவர் மிகவும் கேலி செய்து எதிர்த்தார்.

சரியாக மூன்று மாதம் கழித்து சுமார் 50 வயது மதிக்கத்தக்கதான அவர் மரணப்படுக்கைக்குள்ளாக மாறினார்.

மருத்துவர்கள் வைத்தியம் செய்ய முடியாத அளவு குழப்பமாயிற்று. மிகவும் கூக்குரலிட்டார். ஐயோ, ஐயோ பயமாக இருக்கிறது என கதறினார்.

ஜான் ரபீந்திரநாத் ஐயாவுக்கு விரோதமாய் பேசிவிட்டேன். ஐயாவை எப்படியாவது அழைத்து வாருங்கள். நான் எப்படியாவது மன்னிப்பு கேட்க வேண்டும் என சொல்லி தன் மகன்மார்களை வற்புறுத்தவே அவர்கள் என்னை எப்படியோ கண்டு பிடித்து என்னை வருந்தி அழைத்துச் சென்றார்கள். அவர் என்னிடம் மிகவும் வருந்தி மன்னிப்புக் கேட்டார்.

ஐயா நான் என்றைக்கோ உங்களை மன்னித்துவிட்டேன். எனக்கு எந்த கசப்பும் இல்லை. கவலைப்படாதீர்கள் என சொன்னேன்.

எனக்காக ஜெபியுங்கள் என சொன்னார். நான் ஜெபித்த போது ஆண்டவர் சொன்னார் இவனுக்கு மன்னிப்பே இல்லை. பரிசுத்தாவியை துக்கப்படுத்தி தூஷித்தான் என்று.

மேலும் நான் பார்க்கும்போது பல பிசாசுகள் அந்த மனிதரைச் சுற்றிலும் நின்று கொண்டு அவரை துன்பப்படுத்திக்கொண்டிருப்பதை கண்டேன்.

அதை அவரும் பார்த்து கதறினார். அந்த வீடு மிகவும் பயங்கரமாய் ஒரு நரகம் போல இருந்தது.

ஐயோ, ஐயோ, பயமாய் இருக்கிறது. ஐயோ, பிசாசுகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது என கத்தினார்.

அவர் ஒரு கிறிஸ்தவர் அது மட்டும் அல்ல, ஒரு பள்ளிக்கூட தலைமை ஆசிரியராகவும் இருந்தார்.

அவர் குடும்பத்தார் அவரைப் பார்த்து ஐயோ என சொல்லாமல், இயேசுவே எனச்சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அவர் சொன்னார் என்னை சூழ்ந்திருக்கும் ஆவிகள் அப்படி சொல்ல என்னை விடவில்லை என்று சொல்லி ஐயோ, ஐயோ, என மிகவும் கதறிக்கொண்டே மரித்துப்போனார்.

அந்தக் காட்சி மிகவும் பயங்கரமாய் இருந்தது.

நான் முன்பு சொன்னது போல ஒரு மனிதனின் ஆவி பிரியும் போது மூன்று வித அந்தஸ்தைத் தான் பெற முடியும்.

1) அக்கினித் தீர்ப்பு

2) நியாயத்தீர்ப்பு

3) மகிமையின் தீர்ப்பு

இவைகளைப் பற்றி முன்பே பார்த்து விட்டோம்.

மகிமையின் தீர்ப்படைந்து பூரண அந்தஸ்தைப் பெற கர்த்தர் கிருபை செய்வாராக.

நீங்களும் விழிப்பாய் இருங்கள்.

**நீதிமான்களுக்கு பூமியிலேயே சரிக்கட்டப்படும்(நீதி.11: 31)** என வாசிக்கின்றோம்.

அவர்களை பூரணப்படுத்தவும் அவர்கள் முடிவு ஆசீர்வாதமாய் இருக்கவும் சில நேரம் சில பரிசுத்தவான்களின் மரணங்கள் கூட மிகவும் வேதனை நிறைந்ததாய் இருக்கும்.

ஆனாலும் அவர்கள் முடிவு சமாதானமாய் இருக்கும்.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் அந்த மனிதனுடைய ஆவி அவன் சரீரத்தை விட்டு பிரியும் நேரம் மிக முக்கியமானது.

வயதாகி எதிர்பார்த்த நிலையில் ஒரு மனிதன் மரிப்பது நல்லது. ஏனென்றால்,

அந்த மனிதன் தன்னைத் தான் பரிசோதனை செய்துக்கொள்ளவும் தான் நிரந்தரமாய் வாழப் போகும் இடத்திற்காக தன்னைத் தான் நிதானித்து அறியவும் தன் தவறுகளை அறிக்கையிடவும் சிலவேளை அவனுக்கு சமயம் கிடைக்கலாம்.

ஆனால் எல்லாரும் இப்படித் தான் மரிக்கப் போகிறோம் என அஜாக்கிறதையாய் வாழ்ந்திட முடியாது.

ஏனென்றால்!

எல்லாரும் தங்கள் முழு ஆயுசின் நாட்களையும் வாழ்ந்து முடிப்பார்கள் என உறுதியாய் சொல்ல முடியாது. ஒரு மனிதனுக்கு மரணம் இன்ன நேரம் சம்பவிக்கும் என்றோ அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்ன நேரத்தில் வருவார் என்றோ குறிப்பாய் சொல்ல முடியாது.

அவர் சொல்லி முன் அறிவிப்பு கொடுத்து வருவதில்லை.

திடீரென இவைகள் சம்பவிக்கும். எனவே அந்தச் சமயத்தில் ஒன்றும் செய்ய முடியாது என்பதால் தான் எப்போதும் தேவனை சந்திக்க

ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

**இஸ்ரவேலே, நான் இப்படி உனக்குச் செய்யப்போகிறபடியினால் உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. (ஆமோஸ் 4 : 12).**

இந்த பூமியில் இருக்கும் போதே மரணத்தின் பின்பு நம் நிலைமை என்ன என்பதை தெரிந்துகொள்ளலாம். நமக்கு பரலோகில் என்ன அந்தஸ்து கிடைக்கும்? அங்கே நம்மை எப்படி வரவேற்பார்கள்? நம்மை ஏற்றுக்கொள்ள அங்கே யார் யார் இருப்பார்கள்?

என்பதையெல்லாம் நாம் வாழ்கிற இப்போதே அறிய முடியும். அவைகளை பின்பு விளக்கமாக பார்ப்போம்.

என் சரீரத்தை விட்டு என் ஆவியில் நான் பலமுறை வெளியே வந்திருக்கின்றேன். என்னைப் போலவே அநேக பரிசுத்தவான்களும் இப்படி கிருபை பெற்றிருக்கின்றார்கள்.

பவுல் உயிரோடு இருக்கும் போதே பரதீசி வரைக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டார். **(2கொரிந்தியர் 12 : 2 4).**

நீங்களும் உயிரோடு இருக்கும் போதே பரலோகத்தில் நீங்கள் யார் என உங்கள் ஆவியில் நிழலாட்டமாய் அறிய முடியும்.

பவுல் சொல்லுகிறார்,

**நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதை எனக்கு தந்தருளுவார்;... (2தீமோத்தேயு 4 : 7, 8). என்று.**

அப்படியானால், தான் பரலோகத்தில் ஒரு உயரிய இடத்திற்கு போகப் போகிறதையும், தனக்கு என்று வாடாத நித்தியமான ஜீவ கிரீடம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறதையும், அதை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தன்னை வரவேற்று கொடுக்கப் போகிறார் என்பதையும்,

பவுல் இந்தப் பூமியில் வாழ்ந்த நாட்களிலேயே திட்டமாய் அவைகளை அறிந்து வைத்திருந்தார். பரலோகில் தனக்கு என்ன கிடைக்கும் என்றும், தான் எந்த அந்தஸ்தில் அங்கே இருப்பேன் என்றும், யார் கையினால் தான் கௌரவப்படுத்தப் போகிறேன் என்றும், நம்மைப் போல பாடுள்ள ஒரு மனிதனாகிய பவுலால் அறிந்துக்கொள்ளக் கூடுமானால் நமக்கும் அது மிகவும் சாத்தியமான ஒன்றே.

ஸ்தேவானை கர்த்தர் எழுந்து வரவேற்கிறதை தான் உயிரோடு இருக்கும் போதே அவரால் அறிய முடிந்தது. **(அப்போஸ்தலர் 7: 56).**


*அநேக பரிசுத்தவான்கள் மரிக்கும் போது, தேவதூதர்கள் தங்களை அழைத்துச் செல்ல வருவதையும் சிலவேளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே தங்களை அழைத்துச் செல்ல வருவதையும் கண்டிருக்கிறார்கள்.*

*யுக யுகமாய் நித்திய நித்தியமாக முடிவில்லாத ஒரு வாழ்வு வாழப் போகும் இடத்தை விட்டு விடாமல் இருக்கவும்,*

*சரியான தகுதியோடு கிறிஸ்துவை சந்திக்கவும், ஒவ்வொரு நிமிடமும் ஆயத்தமாக இருப்போம்.*

**எனது மரணமோ அல்லது உம் வருகை**
**நாளோ எது முந்தி என்னை வந்து அழைத்திடுமோ**
**கடைசி முடிவு வரை கைவிடாதிரும் இயேசு நாதா கனிவாய்**
**வேண்டுகிறேன் ஐயா,**

# 5




## அடக்க ஆராதனை

அடக்க ஆராதனை மிகவும் முக்கியமானது.

சிலர் மறித்த பின் எப்படிப் போனால் என்ன? யார் பார்க்கின்றார்கள் என சொல்லுகிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், சிலரின் அடக்கத்தை வேதம் முக்கியப்படுத்துகின்றது.

நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாமிற்குப் பின் தான் அடக்கக்காரியம் முக்கியத்துவம் அடைந்தது.

தன் குடும்பத்திற்காக சொந்தமாக நிலம் வாங்கி அதை முக்கியப்படுத்தினார்.

அது இந்நாள் வரைக்கும் இருக்கிறது.

**பின்னும் (யாக்கோபு) அவன் அவர்களை நோக்கி: நான் என் ஜனத்தாரோடே சேர்க்கப்படப்போகிறேன்; ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ள குகையிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டு.**(ஆதியாகமம் 49: 29).

இஸ்ரவேலின் பல ராஜாக்கள் இங்கே அடக்கம்பண்ணப்பட்டார்கள். ஆனால் சிலர் ராஜாக்களாய் இருந்தும் ராஜாக்களின் கல்லறைகளில் இடம் கிடைக்காமல் புறம்பாகத் தள்ளப்பட்டார்கள் என வேதம் சொல்லுகிறது.

அடக்க ஆராதனையை முக்கியமாய் கருதினாலும், அதிலும் சில கவனிக்க வேண்டிய காரியங்கள் இருக்கிறது.

சில பரிசுத்தவான்கள் எரிக்கப்பட்டு கொல்லப்பட்டதையும்,

*சிலர் கிறிஸ்துவுக்காக வாதிக்கப்பட்டு, கொல்லப்பட்டு, காடுகளிலும் வனாந்திரத்திலும் தூக்கி எறியப்பட்டதையும், ரோம் தேசத்திலும், மற்ற இடங்களிலும், காட்டு மிருகங்களுக்கு இரையானதையும், பல மிஷனெரிகள் கடலில் மூழ்கடித்து அல்லது விபத்தினால் மரித்து, அடக்கம் பண்ணுவாரில்லாமல் கிறிஸ்துவுக்காக மாண்டதையும் மறக்க முடியாது.*

*அதே நேரத்தில் சிலர் மிக துன்மார்க்கமாய், துணிகரமாய் வாழ்ந்து, மரிக்கும் போது கிறிஸ்தவர்களுக்கு உரிய உயரிய ஆராதனையை நடத்தி அவர்களை அடக்கம் செய்ததையும் நம் எல்லாருக்கும் தெரியும்.*

*அவர்கள் நரகத்திற்குத் தான் செல்வார்கள். இதையும் நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாது.*

*அடக்க ஆராதனையை மாம்சக் கண்களோடு பார்த்து அறிய முடியாது. எனினும் அது முக்கியமானது.*

*பக்தன் மோசேயை தேவனாகிய கர்த்தரே மோவாப் தேசத்தில் அடக்கம்பண்ணினார்.*

***அவர் அவனை மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அடக்கம்பண்ணினார். இந்நாள்வரைக்கும் ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறியான்** (உபாகமம் 34 : 6).*

- ★ *ஏன் அதை கர்த்தரே செய்தார்?*
- ★ *ஏன் அதை ஒருவருக்கும் சொல்லவில்லை?*
- ★ *ஏன் அதை யாரும் அறியவில்லை?*
- ★ *ஏன் அது மறைக்கப்பட்டது.*

*ஆண்டவர் எதைச் செய்தாலும் தனியாக செய்வதில்லையென்றும், எதையும் கடமைக்காக செய்வதில்லை என்றும் உங்களுக்குத் தெரியும் இல்லையா?*

*அதற்கு அவர் சிருஷ்டித்த பூக்கள் ஒன்றே சாட்சிக்கு போதும்!*

***காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.***

***என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.** (மத்தேயு 6 : 28, 29)*

*பாருங்கள் தேவன் ஒரு நாளில் அழியும் பூவையே இத்தனை*

நேர்த்தியாய் சிருஷ்டிக்கிறாரே.

அவர் செய்த எதை வேண்டுமானாலும் பாருங்கள். மிகவும் நேர்த்தியாய் அழகாய் கவனமாய் செய்து முடிப்பார். காரணம் அவர் பூரணமானவர்.

முற்றும் முடிய இரட்சிக்கிறவர்.

அவர் செய்கின்ற எல்லாமே முழுமையானது, பூரணமானது. இதற்கு மேல் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்கிற அளவு விசேஷமாய் இருக்கும்.

அப்படியானால் அவர் மோசேயின் அடக்க ஆராதனையையும் முழுமையாய் செய்திருப்பார்.

அதற்குள் நாம் இப்பொழுது போக வேண்டாம்.

ஆனால் மோசேயை தேவனாகிய கர்த்தரே அடக்கம் செய்வதற்கு காரணம் இருக்கிறது.

அதை ஓரளவுக்கு அறிய யூதா 9ம் வசனத்தைப் பாருங்கள்.

**பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்.**

என்று எழுதியிருக்கிறது.

நான் இப்படி நினைக்கிறேன்.

மோசே மரித்தப் பின்பு தேவனாகிய கர்த்தர் அந்த சரீரத்தை அடக்கம்பண்ணும் பொறுப்பை பிரதான தூதர்களில் ஒருவரான மிகாவேலிடம் ஒப்படைத்து விட்டு மோசேயை அழைத்துக்கொண்டு தேவன் பரலோகம் சென்றிருக்க வேண்டும்.

அந்த நேரத்தில் விழுந்துப்போன தூதர்களில் ஒருவனான லூசிபர் வந்து மோசேயின் சரீரம் எனக்குத் தான் சொந்தம் அதை என்னிடம் தர வேண்டும் என தர்க்கித்திருக்க வேண்டும்.

இதை தான் நாம் இங்கே புரிய முடிகிறது.

ஒரு வழக்கம் இருக்கிறது. ஒரு தகப்பனுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்து அதில் தகப்பனுக்கு விரோதமாய் சிலர் இருந்து.

ஒருவன் மட்டும் தகப்பனை நேசித்தால் தகப்பன் மரித்த பின்பு தன் சரீரத்தை அடக்கம் செய்யும் பொறுப்பை அவனுக்கே தகப்பன் கொடுப்பார்.

அதுபோல ஒரு மனிதனுடைய மரண நேரத்தில் பரலோகமும்,

தேவதூதர்களும் பொறுப்பு எடுத்தால் அது தேவ ராஜ்யத்துக்கு சொந்தமானது. அவர் கிறிஸ்துவரும் நாளில் மகிமையோடே எழுந்திருப்பார்.

பிசாசின் பொறுப்பில் சரீரம் போகுமானால் அது உங்களுக்கே தெரியும்.

உயிரோடு இருக்கும் போது மட்டும் அல்ல, மரித்த பின்பும் மரித்த சரீரம் முக்கியம் என புதிய ஏற்பாட்டில் யூதா 9 ல் எழுதப்பட்டிருக்கிறது.

ஏன் பிசாசு மோசேயின் சரீரத்தைக் குறித்து தர்க்கித்தான்?

மோசே ஒரு மனிதனை கொலைச் செய்தார்.

அப்படியானால் 1இராஜாக்கள் 18 : 40 ல் எலியாவும் கொலை செய்தாரே, தாவீதும் ராஜாவும் கொலை செய்தாரே என கேட்க முடியாது.

ஆதி நாட்களில் சிலர் பரலோக அனுமதியோடு கர்த்தர் சொல்லி செய்திருக்கலாம்.

ஆனால் மோசே ஒரு ரட்சகனாய் வந்தாலும் வருவார் என ஒரு யூகத்தில் நினைத்த பிசாசு.

அவரை தீட்டுப்படுத்தி தேவனை விட்டு பிரிக்க மூன்று வழிமுறையை கையாண்டான்.

1) கோபத்தில் கொலை செய்ய வைத்தான்.

2) எகிப்தை விட்டு துரத்தினான்

3) மீதியான் தேசத்து பூஜாரியின் சம்மதம் கிடைக்கச்செய்து மோசேயை தீட்டுப்படுத்தினான்.

இவ்வளவும் செய்தும் மரித்த பின் நம் கட்டுப்பாட்டில் சரீரத்தையாவது மடக்கிப் பிடிக்கலாம் என நினைத்தான்.

ஆனால்

★ மோசேயை உருவாக்கினவர்

★ மோசேயை காப்பாற்றியவர்

★ மோசேயை அழைத்தவர்

மோசேயின் தியாகம், வெறித்தனமாக அவர் தேவன் மேல் வைத்திருந்த அன்பு இவைகளை கர்த்தர் பார்த்தார்.

அதற்காக தாமே இறங்கி வந்து மோவாப் தேசத்திலுள்ள பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கில் மோசேயை அடக்கம் பண்ணினார்.

எபிரெய மொழியில் **QABER** என இந்த அடக்கத்தைக்குறித்து

எழுதப்பட்டிருக்கிறது. அதாவது சகல ஒழுக்கத்தின்படியும், வழிமுறையின்படியும் தேவன் மோசேயை அடக்கம் செய்தார் என்பது இதன் பொருள்.

ஆரம்பித்தவரே முடிவையும் செய்து முடித்தார்.

இது மோசேக்கு மட்டுமல்ல ஒவ்வொரு மனிதனும் மரித்து அவன் ஆவி பிரியும் போது இப்படித்தான் நடக்கிறது. அவன் மரித்த உயிரற்ற சரீரமும், ஆவியும் உலகத்தில் முக்கியமானது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அது எழுந்து மகிமையின் சாயலை தரிக்க வேண்டும்.

***ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.(1தெசலோனிக்கேயர் 4 : 16).***

***ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே.(1கொரிந்தியர் 15 : 35, 36 ).***

***எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.***

***அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.***

***அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது*** *என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.**(1கொரிந்தியர் 15 : 52 54 ).***

***மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.***

***அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் .(1கொரிந்தியர் 15 : 16,21,23).***

ஒரு மனிதன் மரித்தப் பின்பு அவனுக்காக அழுகிறோம். இது இயற்கை. பிரிவினால் அழுகிறோமே தவிர நாம் அழுகிறதினால் அந்த

ஆத்துமாவுக்கு எந்த நன்மையும் வரப் போவதில்லை.

சிலர் சொல்லுகிற **ஆத்தும சாந்தி** மரித்த பின் எடுக்கும் எந்த முயற்சியினாலும் கிடைக்காது.

ஆனால் ஒன்று சொல்லலாம். ஒரு மனிதன் மரணப்படுக்கையில் இருக்கும் போது அவன் பரலோகம் போவானா நரகம் போவானா என்று தெரியாத சூழ்நிலையில் இருப்பானானால் கர்த்தருடைய பிள்ளைகள் அவனை சூழ நின்று உபவாசித்து பாடி ஜெபிக்கும்போது ஒருவேளை

பரலோகத்தின் தேவன் கேட்டு ஒரு மன மாற்றத்துக்குள் அந்த மனிதனை நடத்தவும் தன் பாவங்களைக்குறித்த உணர்வடைய செய்து பாவங்களை அறிக்கை செய்ய வைக்கவும் முடியும்.

ஒருவேளை அவன் கோமா என்கிற மயக்க நிலையில் இருக்கம்போது கூட இது நடக்கும்.

சுற்றிலும் இருக்கிறவர்கள் கதறி ஜெபிக்கும்போது அந்த ஜெப சத்தம் பிசாசை துாரப்படுத்தி ஆவியானவரின் ஆளுகையை அந்த இடத்திற்கு கொண்டு வரும்.


**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.**

**ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார் (ரோமர் 8: 26,27)**

அதே நேரத்தில் இயேசுகிறிஸ்துவும். ரோமர் 8: 34 ல் நாமக்காக ஜெபிக்கின்றார். இயேசுகிறிஸ்துவும், பரிசுத்தாவியானவரும் ஜெபிக்கிறார்கள் நமக்காக.

நாமும் அவர்களோடு இணைந்து அந்த மனிதனுக்குள் ஒரு மனமாற்றம் உண்டாக ஜெபிக்கும்போது அவன் மனந்திரும்ப அதிக வாய்ப்பு இருக்கிறது.

# 6




## குழந்தைகள்

தினமும் பல சிசு கொலைகளைப் பார்க்கிறோம். விபத்திலும், நரபலிக்கும், சிலநேரம் இயற்கையாகவும் பல குழந்தைகள் மரிக்கின்றனர்.

இவைகளின் ஆவி எங்கே போகும் என எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது.

இவைகளை அறிய வேண்டும் என தேவசமுகத்தில் ஜெபிக்கலானேன்.

என் இளவயதின் நாட்களில் வெளிப்பாடுகள், தரிசனங்கள், இவைகள் மிகவும் அரிதாய் இருந்தது. புத்தக வாயிலாக கூட அறிய முடியவில்லை.

எனவே

என் நாட்களில் வேதத்தில் விளங்காத சத்தியங்களையும் எனக்குள் எழும்பும் கேள்விகளுக்கு விடை அறியவும் எனக்கு தெரிந்த ஒரே வழி உபவாசமும், ஜெபமும் தான்.

நல்ல வேளையாய் அது தான் சிறந்த ஒரே வழி என பின்பு தான் நான் அறிந்துகொண்டேன்.

சில சந்தேகங்களை பெரிய ஊழியர்கள் என தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஊழியர்களிடம் மிக ஆவலாய் கேட்பேன் அவர்கள் அனைவரும் சொல்லும் ஒரே பதில்:

**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ,...**

***...நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்.****(உபாகமம் 29: 29).* எனவே அவைகளை அறிய முயற்சிப்பது பாவம் என்று சொல்வார்கள்.

எங்களுக்கு தெரியாது என்று சொல்லியிருந்தாலும் பரவாயில்லை.

***என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் .****(யோவான் 10: 16)* ***நான் அவைகளைப் பேர்சொல்லிக் கூப்பிடுவேன்.****(யோவான் 10: 3).*

என வேதம் சொல்லுகிறது.

நம் ஆண்டவர் பேசும் தெய்வம். அவர் நட்சத்திரங்களோடும் , இயற்கையோடும் மட்டும் பேசுகிறவர் அல்ல, நம்மோடும் பேசுவார் என நான் அறிந்த பின்பு தான் தேவன் என்னோடும் பேச வேண்டும் என காத்திருக்கலானேன்.

சிலவேளை உடனே அவர் பேசுவார். சிலவேளைகளில் மணிக் கணக்காய், நாள்கணக்காய், மாதங்கள், சில வருடங்கள் கூட அவருக்காக சில குறிப்பிட்ட வெளிப்பாடுகளைப் பெற காத்திருந்திருக்கிறேன்.

பலர் சொல்லுவார்கள், கடவுள் நமக்குள் இருக்கிறாரே அவரை வெளியே ஏன் தேட வேண்டும் என்று.

அதுவும் உண்மை தான். ஆனால் அது மட்டுமே உண்மையல்ல.

இந்த கேள்விக்கு பதில் சொல்லுங்கள். பார்க்கலாம்.

யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்து இளைப்பாறினார்.

ஒன்றாக வாழ்ந்தார்கள், உணவு உட்கொண்டார்கள், ஒன்றாகவே ஜெபித்தார்கள்.

இயேசு உலகத்தை விட்டு பரம்மேறும் போது சொன்னார்

***இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று.****(மத்தேயு 28 : 20).*

மேலும்

யோவான் 17 : 22, 26 ஆகிய வசனங்களில் பிதாவே, நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்கும்படி வேண்டுகிறேன் என ஜெபித்தார்.

அதாவது பிதாவும் குமாரனும் ஒன்றாய் இருக்கிறார்கள். என்னைக் காண்கிறவன் பிதாவைக் காண்கிறான் என இயேசு பலமுறை சொல்லியிருக்கின்றார். அதுபோல

★ *இயேசு நமக்குள் வாழ்கிறார் இல்லையா,*

*அதோடு*

★ *இயேசு நம்மோடு கூடவும் இருக்கிறார்.*

*இதில் நமக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.*

*ஆனால்,*

*வெளி 1: 10 முதல் 18 வரை உள்ள வசனம் இப்படிச் சொல்கிறது*

***கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்...***

***...அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்க திரும்பினேன்; திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்,***

***அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்.***

***அவருடைய சிரசும் மயிரும் வெண் பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது;***

***அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது.***

***தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.***

***நான் அவரைக் கண்டபோது*** *செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்;* ***அப்பொழுது அவர் தம்முடைய வலதுகரத்தை என்மேல் வைத்து, என்னை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்;***

***மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.*** *என்று சொல்கிறதை வாசிக்கிறோம்.*

பார்த்தீர்களா?

இதே இயேசுவின் மார்பில் தான் ஒருநாள் யோவான் சாய்ந்து இளைப்பாறினார். ஒன்றாய் உறங்கி ஒன்றாக புசித்து ஒன்றாகவே வாழ்ந்தார்கள்.

ஆனால் இப்பொழுது தான் பார்க்கிற இயேசு மிகப் பிரமாண்டமான மாட்சிமையாய் வல்லமையோடு காணப்படுகிறார். அவரைப் பார்த்த மாத்திரத்திலே யோவான் செத்தவனைப் போல கீழே விழுகிற அளவுக்கு அந்தக் காட்சி பயங்கரமாய் இருந்தது.

இது வேறே இயேசு, அது வேறே இயேசு அல்ல. உங்களுக்குள் நான் வாசம்பண்ணுகிறேன் என்று சொன்ன அதே இயேசு கிறிஸ்துவை தான் யோவான் பார்க்கிறார்.

பரலோகில் அவர் அருகில் செல்லவே முடியாதா? என குழப்பம் வேண்டாம்.

ஒரு ராஜாவைப் பாருங்கள்,

சாதாரண நேரங்களில் அரண்மனையில் எல்லோரோடும் பேசி சிரித்துப் பழகி சந்தோஷமாய் இருப்பார். பிள்ளைகளை துாக்குவார், அவர்களோடு விளையாடி நேரம் செலவிடுவார்,

ஆனால்

ராஜ வஸ்திரம் தரித்து சிங்காசனத்தில் அமர்ந்துவிட்டால்,

அவரைப் பார்க்க வருகிறவர்கள் யாரானாலும், தாயோ, தகப்பனோ, மனைவியோ, சொந்த பிள்ளைகளோ அவரை வணங்கியே ஆக வேண்டும்.

1இராஜாக்கள் 1: 47 ல் தாவீது தன் சொந்த மகனாகிய சாலெ ாமோனை, தானே ராஜாவாக்கினார், பின்பு தனக்கு எழுந்திருக்க பெலன் இல்லாத போதும் கூட கட்டிலின்மேல் குனிந்து தன் மகனாகிய சாலொமோனை பணிந்துக்கொண்டார் என பார்க்கிறோம்.

அது போல ஒரு ராஜா யுத்தத்திற்குப் புறப்பட யுத்த வஸ்திரம் தரித்துவிட்டால் எல்லாரும் நடுங்குவார்கள். ஒரு சிங்கம் போல மாறிவிடுவார். தனக்கு முன் எதிர்ப்படுகிற யாரையும் விடமாட்டார். யார் சொல்வதையும் கேட்கவும் மாட்டார்.

பாருங்கள் ஒரே ராஜா வீட்டில் வேறு, சிங்காசனத்தில் வேறு, யுத்த நேரத்தில் வேறு என மூன்று நிலைகளை எடுக்கக் கூடுமானால் சர்வலோக ராஜாவை குறித்து அறிய முடியுமோ?

அதுபோலத் தான்

இயேசு நமக்குள் வாழ்வதும் மெய்தான். அவர் நம்மோடு இருப்பதும் மெய் தான்.

அதே வேளையில் மாட்சிமையில் மிக பிரமாண்டமான வல்லமையாய், கண்கள் குருடாக தக்கதாய், இருதயம் மெழுகுபோல உருகத்தக்கதாய், சரீர பெலனெல்லாம் அற்றுப் போகத் தக்கதாய் வெளிப்படுவதும் மெய் தான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

தேவனாகிய கர்த்தர் பல நிலைகளில் தம்மை நமக்கு வெளிப்படுத்துகின்றார்.

இயேசு தம் முழு மகிமையோடும் பூமிக்கு இறங்கி வந்திருந்தால் மனிதர்கள் எரிந்து சாம்பலாய் போயிருப்பார்கள்.

ஆகவேதான் அவர் இவ்விதமாக பூமிக்கு வந்தார்.

***அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். (பிலிப்பியர் 2 : 6, 7).***

சரி இப்பொழுது விஷயத்திற்கு வருவோம்,

பிள்ளைகளின் ஆவிகளை குறித்து அறிய கர்த்தரை முழு இருதயத்தோடும் தேவனை தேடலானேன்.

ஒரு நாள் நான் ஆவிக்குள்ளாகி பரலோகத்தில் பிரத்தியோகமாக சிறுவர்களைப் பாதுகாக்கும் ஒரு பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டேன்.

அங்கே உலகம் உண்டானது முதல் இன்று வரை விபரம் தெரியும் வயதுக்கு முன், அதாவது நன்மை எது தீமை எது என அறியும் வயதுக்கு முன்பு மற்றவர்களாலேயோ அல்லது இயற்கையாகவோ மரிக்கும் சிறுபிள்ளைகளின் ஆவிகள் காக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறதை என்னை அழைத்துச் சென்ற தேவதூதன் காண்பித்தார்.

இதில் எல்லா மதத்தின் பிள்ளைகளும் அடங்குவார்கள். அவர்கள் தேவதூதர் போல காணப்படுகிறார்கள். அவர்களுக்கு பல வித

*இதில் எல்லா மதத்தின் பிள்ளைகளும் அடங்குவார்கள். அவர்கள் தேவதூதர் போல காணப்படுகிறார்கள். அவர்களுக்கு பல வித பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.*

பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றது.

அவைகளில் தேறுகிறவர்கள் வேறு இடத்துக்கு மாற்றப்படலாம் என நினைக்கின்றேன். இல்லையெனில் பாடங்கள் தேவை இல்லையே.

இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு, உயிர்த்தெழுதல் போன்றவற்றைத்தான் பாடங்களாக கற்றுக் கொடுக்கின்றனர்.

நான் பார்த்த இடம் பரலோகம் போல இருந்தாலும், பரலோகம் போல அல்லாது முற்றிலும் பயிற்சி, கற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை சார்ந்திருந்தது.

வகுப்புகள் அவர்களுக்கு உயிரோட்டம் உடையவைகளாய் எடுக்கப்படுகிறது.

சிலுவை என்றால் முழுப்பரிமான கோணத்தில் இங்கே நேரடியாக நடந்த காரியங்களை நேரடியாக பார்ப்பது போன்றே கற்றுக் கொடுக்கின்றன.

பரலோகத்தில் அனைத்தும் உயிர் உடையவை.
இவைகளைப் பார்த்து நான் அறிந்தவை என்னவென்றால்,

பிள்ளைகளுக்கு பரீட்சை நடக்கலாம். சிலுவையை நம்ப அவர்களுக்கு கட்டாயம் இல்லை. அவர்களாக ஏற்றுக்கொள்ளவும்

நம்பாமல் போகவும் முடியும்.
ஒருவேளை நம்பாதவர்களுக்கு வேறு திட்டமோ நரகமோ கொடுக்கப்படலாம்.

இது என் சொந்தக் கருத்து. இதை தேவதூதன் சொல்லவில்லை.

ஒரு மனிதன் மரித்த பின் அவனுக்கு நியாயதீர்ப்பு மட்டுமே. அங்கே மனந்திரும்ப வாய்ப்பு இல்லை என வேதத்தில் வசனங்கள் இருக்கிறது மெய் தான்.

***அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே*** *(எபிரெயர் 9 : 27 ).*
ஆனால்

***1பேதுரு 3:18, 22 ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்தாலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.***

***அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற் போனவைகள்;***

***அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்.***

*அப்படியானால் இன்றும் அப்படி எல்லா மனிதர்களுக்கும் இயேசு சுவிசேஷம் அறிவிப்பாரா என்றால் இல்லை. அப்படி நடக்காது. ஒரு மனிதன் மரித்தப் பின் அவனுக்கு இரட்சிக்கப்பட வாய்ப்பே இல்லை.*

*ஆனால் நோவா காலத்தில் உலக முழுவதும் அழிவுற்றது. நோவா 120 வருடம் பிரசங்கித்தார். ஆனால் உலகம் முழுவதும் பிரயாணப்பட்டு பிரசங்கித்திருக்க முடியுமா?*

*எனவே சுவிசேஷம் ஒருமுறை கூட அறியாமல் மரிப்பவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தேவன் கொடுத்தார்.*

*ஆனால் இன்று கிறிஸ்துவுக்கு பின் எல்லாரும் இயேசுவை அறிவிக்க வேண்டும். அவர்கள் அறியவும் வேண்டும்.*

***இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம் பூலோகம் முழுவதும் பிரசங்கிக்கப்பட வேண்டும்.***

*ஆனால் பச்சிளம் குழந்தைகள், பாவம் அறியாத நிலையில் மரிக்கும் குழந்தைகள் சில காரியங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.*

*பரலோகில் வயது வித்தியாசம் இல்லை. சிறுவர்கள் பெரியவர்கள் என அங்கே வேறுபாடு இல்லை.*

*1யோவான் 3 : 2 ல் அவருக்கு ஒப்பாயிருப்போம் எனவும்.*


*எபேசியர் 4 : 11 ல் அவர் (இயேசு) வளர்ச்சிக்கு ஏற்ற வளர்ச்சி உடையவர்களாய் இருப்போம் என்றும் சொல்கிறது.*

*இதுவும் எல்லாரும் அல்ல. பவுலையும் ஒரு சாதாரண விசுவாசியையும் ஒப்பிட முடியுமா? அப்படியானால் அவர் பட்ட பாடுகள் வீணாகுமே,*

*அந்தஸ்துகள் இருந்தாலும் பார்வையில் எல்லோரும் இயேசுவின் சாயலைப் போல அவர் உடன் பிறந்த சகோதரர்கள் போல இருப்போம்.*

*அப்படியானால் பச்சிளங்குழந்தைகளுக்கு ஒரு பயிற்சி தேவைப்படத்தான் செய்யும் என நினைக்கத் தோன்றுகிறதல்லவா?*

# 7




## இரத்த சாட்சிகளின் ஆவிகள்

ஒரு நாள் ஒரு தரிசனத்தில் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டேன். அங்கே 24 மூப்பர்களின் சங்கத்தைப் பார்த்தேன். மகா பரிசுத்தமுள்ள ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிங்காசனத்தில் வீற்றிருக்கக் கண்டேன்.

அவர் முகம் மிகவும் கோபமாய் இருப்பதை காட்டிற்று. கண்கள் சிவந்தும் காணப்பட்டன.

உலகம் உண்டானது முதல், இதுவரை இரத்தச் சாட்சிகளாக தங்கள் ஜீவனை கொடுத்தவர்களின் கூக்குரல் எங்கோ ஓர் இடத்தில் இருந்து வருவதைக் கேட்டேன்.

ஆண்டவரே எதுவரைக்கும் பொறுமை யாய் இருப்பீர்? எங்கள் இரத்தத்திற்காக நீர் என்றைக்கு பழிவாங்குவீர்? என கூக்குரலிடும் சத்தம் மிகவும் பயங்கரமாய் இருந்தது.

ஆண்டவரே எதுவரைக்கும் பொறுமையாய் இருப்பீர்? எங்கள் இரத்தத்திற்காக நீர் என்றைக்கு பழிவாங்குவீர்? என கூக்குரலிடும் சத்தம் மிகவும் பயங்கரமாய் இருந்தது.

இரத்தச் சாட்சிகளாய் பக்தர்கள் மரிக்கும். போது அவர்களைக் கொலை செய்கிறவர்களைப் பார்த்து பிதாவே இவர்களுக்கு மன்னியும் எனச் சொல்லி அவர்கள் தங்கள் ஜீவனை விடுவது மெய் தான்.

ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு அவர்களுக்குள் இருந்து அப்படி ஜெபிக்கின்றார்.

*அதைத் தான் அவர்கள் வாய் வழியாக சொல்கிறார்கள்.*

*இரத்தச் சாட்சியாக மரிக்கும் ஒரு மனிதன் பரிசுத்தாவியானவரால் முழுவதும் ஆட்கொள்ளப்படுகிறான். அவன் சிந்தை, பேச்சு, சுபாவம் ஆவியானவரின் ஆளுகைக்குள் வந்து விடுகிறது.*

*ஒரு மனிதன் தன்னை அடித்துக் கொலை செய்யும் ஒருவனை அவனால் மன்னிக்க முடியாது. ஆனால் மத்தேயு 10 : 20 சொல்லுகிறதை கவனியுங்கள்.*

***பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.***

*ஆனால் இரத்தச் சாட்சிகளாய் மரித்தவர்களின் இரத்தம் இன்றும் நியாயத்தீர்ப்புக்காக காத்துக்கொண்டு தான் இருக்கிறது.*

*அதற்கு ஆதாரமாக சில வசனங்களைப் பார்போம்.*

★ ***புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்.(எபிரெயர் 12 : 24).***

★ ***நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்.(மத்தேயு 23 : 35).***

★ ***ஆபேலின் இரத்தம்முதல் பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்ட சகரியாவின் இரத்தம் வரைக்கும், உலகத்தோற்ற முதற்கொண்டு சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்தில் கேட்கப்படத்தக்கதாக அப்படிச் செய்வார்கள் என்று சொல்லுகிறது.(லூாக்.11: 50).***

★ ***அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்; அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன்.(வெளி 16 : 6).***

*எனவே இரத்தச் சாட்சியாய் மரிப்பவர்கள், தங்களை கொலை செய்கிறவர்களைக் கட்டாயம் மன்னிக்க வேண்டும்.*

*ஆனால் அவர்கள் இரத்தத்திற்காக தேவன் பழி வாங்கியே*

*தீருவார். அது நியாயத்தீர்ப்பின் நாளில் மட்டும் அல்ல.*

*இந்த உலகத்தில் அவர்கள் உயிர் வாழும் நாட்களிலேயே நடக்கும்.*

*நான் பார்த்த தரிசனத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மிகுந்த கோபமாய் காணப்பட்டதற்கு காரணம் என்னவென்று கண்டுகொண்டேன்.*

*இரத்தச் சாட்சிகளின் கூக்குரல் மிகவும் பெரிதாயும் உள்ளத்தை உடைக்கும் விதமாகவும் இருந்தது.*

*இரத்தச் சாட்சிகள் பரலோகில் பாட நான் கேட்டப் பாடல் தான் இந்தப் பாடல்...*

**தாமதமேனோ எங்கள் தந்தையே**
**தாமதித்தோம் இந்நாள் வரையும்**
**தாழ்விடந்தண்ணில் நோக்கிப் பார்த்தீர்**
**தற்பரனே இரங்கிடுவீர்**
**தாமதமேனோ ... தாமதமேனோ...**
**தாமதமேனோ .. எங்கள் தந்தையே**

*இப் பாடலை முறைப்படி பாடுகிறார்கள் ...*

*இதைக் கேட்டதும் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாகிய இயேசுகிறிஸ்து மிகுந்த கோபத்தோடு சிங்காசனத்தை விட்டு எழும்பினார்.*

*உடனே 24 மூப்பர்களும் தங்கள் கிரீடங்களைக் கழற்றித் கீழே வைத்து சாஷ்டாங்கமாய் ஆண்டவர் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே*

*இன்னும் கொஞ்சம் பொறுமையாய் இரும், பொறுமையாய் இரும் என மன்றாடினார்கள்.*

*அது மோசே தேவாதி தேவனுக்கு முன்பாக திறப்பிலே நின்று பரிந்து பேசினதைப் போல இருந்தது.*

*மோசே சொன்னார்,*

***ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்று.(யாத்திராகமம் 32: 32).***

*இரத்தச் சாட்சிகளின் சத்தம் இன்றும் பரலோகில் தொனித்துக்கொண்டேயிருக்கிறது.*

வேறு ஒரு தரிசனத்தில் ஆவிக்குள்ளானேன். நான் பெரிய கூட்டத்தின் மத்தியில் பரலோகில் நிற்கக் கண்டேன்.

அப்போது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மாட்சிமையோடு சிங்காசனத்தில் வந்து அமருவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டிருக்கிறதை கண்டேன்.

மிகுந்த மின்னல்களும், பிரகாசங்களும் கண்களைப் பறிக்கத்தக்கதாய் தோன்றின. எல்லாரும் திரும்பி பார்க்கும் அளவுக்கு வெளிச்சம் மின்னியது. அங்கே ஒரு கூட்ட ஜனங்கள் நடந்து வந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு மிகுந்த கனமும் மதிப்பும் கொடுக்கப்பட்டது. இவர்கள் யாராய் இருப்பார்கள் என நான் ஆச்சரியப்பட்ட போது

என் அருகில் இருந்த ஒருவர்

இவர்கள் தங்கள் ஜீவனையும் பாராமல் இயேசுவுக்காய், சுவிசேஷத்திற்காய் இரத்தச்சாட்சிகளாய் மரித்தவர்கள் என்று சொன்னார்.

ஆம் அவர்கள் இரத்தச் சாட்சிகளே தான். அவர்களுக்கு தனி இடம், உயர்வு, தனி அந்தஸ்து என பல சலுகைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது.

அவர்கள் எங்கும் செல்லலாம். அவர்கள் போகும் இடமெல்லாம் அவர்களைச் சூழ வெளிச்சம் பிரகாசிக்கும். அவர்களை பார்க்கிறவர்களெல்லாம் நாமும் இரத்தச் சாட்சியாய் மரித்திருக்கலாமே என்றே தோன்றும்.

ஆனால் அந்தப் பாக்கியம் பிதாவினால் யாருக்கு நியமிக்கப்பட்டதோ அவர்களுக்கே கிடைக்கும்.

அது மிக உயரிய அந்தஸ்துகளில் ஒன்று.

ஆபிரகாம், மோசே, எலியா, எலிசா, தாவீது போன்றவர்களும் மிக உயரிய அந்தஸ்தையுடையவர்கள் தான்.

ஆனால் இரத்தச் சாட்சிகளின் காரியங்களோ முற்றிலும் மாறுபட்டவை.

இரத்தச் சாட்சிகளாக கர்த்தருக்காக மரிக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் இந்த உலகில் இருக்கும் போதே

பல கிருபைகளையும், வரங்களையும், தைரியத்தையும், விசுவாசம் போன்ற அநேக காரியங்கள் கிருபையாய் அவர்களுக்குக் கொடுத்து அவர்களை வழி நடத்துகின்றார்.

இரத்தச் சாட்சியின் அழைப்பு தானாக தேவன் அவர்கள் மேல் திணிப்பதில்லை. மனிதர்களாகிய நாமும் அதற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

*இதில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று இருக்கின்றது.*

★ பொதுவான இரத்தச் சாட்சிகள்

★ முன் குறிக்கப்பட்ட இரத்தச் சாட்சிகள்.

என இரண்டு வகை இருக்கிறது.

**பொதுவான இரத்தச் சாட்சிகள் என்பது**

ஒரு ஊரில் ஒரு மதக் கலவரம் ஏற்படுகிறது என வைத்துக்கொள்ளுங்கள். ஏராளமான சிறுவர்கள், பெண்கள், வாலிபர்கள் என மரிப்பார்கள்.

அவர்கள் அப்படி மரிப்பதை விரும்பமாட்டார்கள். ஆனால் திடீரென சம்பவிப்பதினால் மரிக்கிறார்கள். மீதம் உள்ளவர்கள் சிலர் ஓடி மறைந்துகொள்ளுவார்கள். ஐயோ... விடுங்கள் என கதறுவார்கள். சிலர் இயேசுவை மறுதலிப்பவர்களும் உண்டு.

**முன் குறிக்கப்பட்ட இரத்தச் சாட்சிகள்.**

ஆனால், ஸ்தேவானைப் போல, பேதுரு, பவுல், ஆதி அப்போஸ்தலர்களைப் போல மரணமே உன் கூர் எங்கே என சவால்விடும் அளவு துணிந்து, அடிக்க அடிக்க இயேசுவே ஆண்டவர் என்றும், பிதாவே இவர்களை மன்னியும் என்றும், தங்களை அடித்துக்கொல்லுகிறவர்களையும் மன்னித்து, நேசித்து, இந்தவித மரணத்தை வாஞ்சித்து ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்தான் இரத்தச்சாட்சியின் அபிஷேகம் பெற்றவர்கள்.

அவர்களுக்கு பயம் இல்லை.

அவர்களுக்கு மற்றவர்கள் மேல் கசப்பு இல்லை.

மரணமே உன் கூர் எங்கே என்று சவால் விடும் வழிமை படைத்தவர்கள்.

அவர்கள் விசேஷமானவர்கள், பாக்கியவான்கள்.

**இரத்தச் சாட்சியின் அழைப்பும் அபிஷேகமும்**

*எல்லோருக்கும் இந்தப் பாக்கியம் கிடைப்பதில்லை. சிலர் தேவனால் தகுதி பெறுகிறார்கள். சிலர் தங்களைத் தாங்களே இந்த கனமான ஊழியத்திற்குத் தகுதியாக்கிக்கொள்கிறார்கள்.*

*இப்படிப்பட்டவர்களை குறித்து வேதம் இப்படி சொல்லுகிறது.* ***ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்;(எபிரெயர் 11 : 35).***

*பெரியவர்களானாலும், சிறுவர்களானாலும் சரி இந்த அழைப்பைப் பெற்றவர்களுக்கு ஒரு அசாதரண தைரியமும் சகிப்புத் தன்மையும் இருக்கும்.*

*பெருங்கூட்டத்தைக் கண்டு அஞ்சமாட்டார்கள். கத்தியோ, துப்பாக்கியோ, கற்களோ மற்றும் வேறு எந்த காரியமோ இவர்களைப் பயப்படுத்தாது.*

*இவர்களுக்குள்ளே சுவிசேஷ பாரமும், ஆத்தும தாகமும் எரியும் விளக்காக எரிந்து கொண்டேயிருக்கும்.*

*மேலும் உலக காரியங்களில் அதிக நாட்டம் இல்லாதவர்களாய் இருப்பார்கள். இவர்களுக்கு நாள்தோறும் பாடுகளும் போராட்டங்களும் இருக்கும்.*


*இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்கள் இவர்கள் வாழ்க்கையில் கிரியை செய்யும். தேவனாகிய கர்த்தர் இவர்களோடு விசேஷித்த விதமாய் தங்கியிருப்பதைக் காண முடியும்.*

*எபிரெயர் 2 : 15 ல் சொல்லப்பட்ட மரணபயம் அவர்களுக்கு இருக்காது. மேலும்,*

*இவர்கள் பிள்ளைகளைக் குறித்தோ, எதிர்காலத்தைக் குறித்தோ கலங்க மாட்டார்கள்.*

*தேவனே அவர்களை விசேஷமாய் பாதுகாத்து போஷிப்பார்.*

# 8




## தற்கொலை செய்தவர்களின் ஆவி

தன்னைத் தான் கொலை செய்வது ஒரு மிகப் பெரிய பாவம். அரசாங்கத்தினாலும் அது தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

ஒரு மனிதன் மற்ற ஒரு மனிதனை கொலை செய்வதும் தன்னைத் தான் கொலை செய்வதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

எல்லா அதிகாரமும் இறைவனாலே உண்டாயிருக்கிறது. நாம் அதிகாரத்திற்கு கீழ்படிந்து நடக்க வேண்டும்.

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.**

**ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.**

> ஒரு மனிதன் தன்னைத் தான் அழித்துக்கொள்ள அவனுக்கு உரிமை இல்லை.

என ரோமர் 13 : 1 , 2 வசனங்கள் சொல்லுகிறது.

மனிதன் தன்னைத் தானே உண்டாக்கவில்லை. ஒரு மனிதன் மற்ற மனிதனையும் உண்டாக்கவும் இல்லை.

எல்லா மனிதர்களும் தேவனாலேயே உண்டாக்கப்பட்டார்கள். ஆகவே, ஒரு மனிதன் தன்னைத் தான் அழித்துக்கொள்ள அவனுக்கு உரிமை இல்லை.

***நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?***

***ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்.(1கொரிந்தியர் 3 : 16,17).***

*மேலும் தன் சரீரத்தைக் கெடுக்கவும் அவனுக்கு உரிமை இல்லை.*

*அதைக் கூட விடுங்கள்.*

*மனிதன் தன் இஷ்டப்படி நடக்கவோ, தன் இஷ்டப்படி சிந்திக்கவோ கூட கூடாது என வேதம் சொல்லுகிறது.*

***உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து.(நீதி 3 : 5)***

***மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்.(நீதி 16 : 25).***

*கர்த்தருடைய ஊழியக்காரன் தான் இஷ்டப்படி எதையுமே செய்யக்கூடாது.*

*இப்படிப்பட்ட சட்டம் நமக்கு இருப்பதினால் நாமாக சுயமாக எதையும் செய்யவும் நினைக்கவும் நம்மில் நமக்கே உரிமை இல்லாதிருக்கும் போது மற்றவைகள் எப்படி?*

*1கொரிந்தியர் 6 : 19, 20 என வேத பகுதி இன்னும் தெளிவாய் சொல்லுகிறது.*

***உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?***

***கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.***

*நீங்கள் கிரயத்துக்கு (விலைக்கு) வாங்கப்பட்டவர்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தினதினாலே அந்த இரத்தத்தை விலையாக கொடுத்து நம்மை வாங்கியிருக்கிறார்.*

*நாம் நமக்கு சொந்தமானவர்கள் அல்லாததினாலே நம்மை நாமே கொலை செய்ய நமக்கு உரிமை இல்லை.*

*வசனத்தை அறிந்திருந்தும் சத்தியத்தில் நடக்கின்ற பல*

கிறிஸ்தவர்களும் கூட சிலவேளைகளில் தங்களுக்கு தாங்க முடியாத உபத்திரவம் வரும் போது தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

இது மிகவும் துக்கமான காரியம்.

**தற்கொலைக்கு காரணம்**

தற்கொலைக்கு காரணம் பல இருந்தாலும் மிக முக்கியமாக இரண்டு காரணங்கள் தான் இருக்கிறது.

**1)** தற்கொலையைத் தூண்டும் ஆவி என்று மனிதனைக் கொலை செய்யும் ஆவிகள் உலகத்தில் அதிகமாய் காணப்படுகின்றன.

**அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலை பாதகனாயிருக்கிறான்.** **(யோவான் 8: 44).**

தற்கொலை செய்ய தூண்டுகிறது பிசாசு. என்னிடத்தில் ஜெபத்துக்கு வருகிற பலர் சொல்லுவார்கள், நீ சாகவேண்டும் நீ சாகவேண்டும் என ஏதோ ஒரு சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கின்றது என்று.

அது பிசாசின் சத்தம் அதை ஜெயிக்க முடியும். ஆனால் சிலரோ தாங்கள் செய்கிறது இன்னது என்று அறியாமல் தவறுகளை செய்துவிடுகிறார்கள்.

**இரண்டாவது**

அவர்கள் குடும்பத்தில் யாரோ ஒருவர் மரணத்துக்கேதுவான பாவம் செய்திருக்க வேண்டும்.

★ மற்றவர்களை கொலை செய்திருக்கலாம்

★ தவறான தொடர்பினால் உண்டான குழந்தையை அழித்திருக்கலாம்.

இப்படி மரணத்துக்கு ஏதுவான பாவம் செய்திருப்பார்களானால் அவர்கள் சந்ததியை தற்கொலை பாவம் தொடர்ந்து பிடிக்கும். இவைகளையெல்லாம் ஜெயிக்கவும் மேற்கொள்ளவும் வழி இயேசுவிடத்தில் உண்டு.

ஒரு சமயம் நரகத்தில் சங்கிலிகளால் கட்டப்பட்டு வாதிக்கப்படும் ஒரு கூட்டத்தைக் கண்டேன்.

ஆகவே எந்த காரணமானாலும் தற்கொலை செய்வது மன்னிக்க முடியாத குற்றமாய் தேவனால் கருதப்படுகிறது.

**தற்கொலை செய்கிறவர்கள்**

★ தேவனை செயலற்றவராக காண்பிக்கிறார்கள்.

★ தேவன் என்னை விட்டு விலகிவிட்டார் என நினைக்கிறார்கள்.

★ அவிசுவாசிகளை விட கேடான நிலையில் இருக்கின்றார்கள்.

★ கர்த்தரை மறுதலிக்கிறார்கள்.

★ பிசாசுக்கு முன்பாகவும் தேவ தூதர்களுக்கு முன்பாகவும் தேவனை அவமானப்படுத்துகிறார்கள்.

ஒரு சமயம் நரகத்தில் சங்கிலிகளால் கட்டப்பட்டு வாதிக்கப்படும் ஒரு கூட்டத்தைக் கண்டேன். அவர்கள் யார் என மிகவும் கவலையோடும் பயத்தோடும் அறிய முற்பட்டேன். அப்போது ஆண்டவர் சொன்னார்,

மகனே இவைகள் தற்கொலை செய்துகொண்டவர்களின் ஆவிகள். அறிந்து செய்கிறவர்களுக்கு அநேக அடிகள்.(லூாக்கா 12: 47). அவர்கள் என்னை அறிந்தும் என் அன்பை ருசி பார்த்தும் பின்பு வந்த சோதனையில் விழுந்துப் போய் தங்களைத் தாங்களே கொலை செய்தவர்கள் என்று சொன்னார்.

> ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல. வருடக்கணக்கில், யுகா யுகமாய் நரக ஆக்கினையில் தவிக்க வேண்டும்.

மேலும் உலகத்தில் இருந்த போது எந்தக் காரணத்தை தாங்க முடியாமல் தற்கொலை செய்தார்களோ, எந்த பிரச்சனை அவர்களை தற் கொலைக்கு நேராக நடத்தியதோ, அதைவிட ஆயிரம் மடங்கு அதிகக் கஷ்டத்தினால் தினந்தோறும், நிமிடம் தோறும், வருடம் தோறும் முடிவில்லாமல், நித்திய நித்தியமாய், யுக யுகமாய் தாங்க முடியாத உபத்திரவங்களால் கதறிக் கதறி அழுகிறார்கள்.

சாதாரண அழுகை அல்ல. உலகத்தில் காணப்படும் எந்த உச்சக் கட்ட உபத்திரவத்தையும் அதோடு ஒப்பிடவே முடியாது.

அது முடிவில்லாதது... நித்தியமானது...
தப்பிக்கவோ மீண்டு வரவோ வழியே இல்லை.

ஒருவேளை தற்கொலை செய்கிறவர்கள், மரித்த பின் நரகத்தில் போய் நினைக்கலாம், ஐயோ தெரியாமல் செய்துவிட்டேனே, இப்படி தெரிந்திருந்தால் நான் மரித்திருக்கமாட்டேனே என ஆனால் அப்போது நினைத்து ஒரு பிரயோஜனமும் இல்லை.

சிறு காரியங்களைக் கூட பிரச்சனை என நினைத்து மிக

சாதாரணக் காரணங்களுக்காக கூட இன்று மனிதர்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள்.

கேவலம் படிப்பில் தோல்விக்காகவும் கூட பிள்ளைகள் தங்கள் மிக விலையேறப் பெற்ற உயிரை, வாழ்க்கையை மாய்த்துக்கொள்கிறார்கள்.

அதன் பின்பு எத்தனையோ வழிகளில் அவர்கள் முன்னேறி வர எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றது.

மேலும் வேலைப் பழு என்றும், மாமியார் கொடுமை என்றும், கடன் பிரச்சனை என்றும், வியாதிக்காகவும் கூட மனிதர்கள் தற்கொலை செய்து மரிக்கின்றார்கள்.

மரித்த பின் எங்கே போவேன் என்ற எண்ணமும் அறிவும் அவர்களுக்கு இருக்குமானால் ஒரு போதும் அவர்கள் அப்படிச் செய்யவேமாட்டார்கள்.

நரகத்தில் தனி அறையில் அக்கினியின் நடுவே சங்கிலிகளால் கட்டப்பட்டு காணப்படுகிற இவர்களுக்கு அடிகளும் தூஷணமான வார்த்தைகளும் புழுக்களும் தான் மிச்சம்.

ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல. வருடக்கணக்கில், யுகா யுகமாய் நரக ஆக்கினையில் தவிக்க வேண்டும்.

ஐயோ, ஐயோ, ஐயோ என நிரந்தரமான சத்தம் தொனித்துக்கொண்டேயிருக்கும்.

எப்படி பரலோகில் அந்தஸ்துக்கள் இருக்கிறதோ அதேபோல நரகத்திலும் வாதிக்கப்படுவதில் வித்தியாசம் இருக்கின்றதை பார்த்திருக்கிறேன்.

நியாயத்தீர்ப்பு என்று சொன்னாலே எல்லாருக்கும் ஒரேவித தண்டனை இல்லை என்று தானே அர்த்தமாகிறது.

நரகம் என்றும், பாதாளம் அக்கினிக் கடல் என்றும், நித்திய இருள் என்றும் பல பெயர்கள் நரகத்திற்கு சொல்லப்பட்டிருக்கிறது இவை அனைத்தும் ஒன்றல்ல.

அவைகள் எல்லாம் இன்றும் இனப் பெயர்களோடு அழைக்கப்பட்டு, ஒவ்வொரு பெயருக்குமுடைய அர்த்தத்தோடு கொடுரமாக்கப்பட்டது.


இதில் விபசாரகாரருக்கு தனி தண்டனை, குடிகாரர்கள், தேவனுடைய அழைப்பை உதாசினப்படுத்தினவர்கள், பரிசுத்தாவியை தூஷித்தவர்கள், கொலைகாரர்கள் போன்றவர்களுக்கு முறையே

தண்டனைகள் வழங்கப்பட்டாலும், தற்கொலை செய்துகொண்டவர்களின் ஆவிகள் தான் மிக பரிதாபமாக வாதிக்கப்படுகிறதைக் கண்டேன்.

★ இவர்கள் வாழ்ந்திருக்க முடியும்
★ இவர்கள் யோசித்திருக்க முடியும்
★ இவர்கள் ஜெயித்திருக்க முடியும்

மற்றவர்களை கொலை செய்கிறவர்களைவிட தன்னைத்தானே கொலை செய்கிறவர்கள் பாடுதான் மிக வேதனைக்குரியது.

# 9




## பூரணமாக்கப்பட்டவர்கள்

நாம் அனைவரும் ஒரு நாள் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நிற்கத்தான் போகின்றோம்.

எல்லா மனிதர்களுக்கும் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் முழுப் பொறுப்பையும் பிதாவாகிய தம் தேவன் குமாரனாகிய இயேசுவுக்குக் கொடுத்திருக்கின்றார். *(2தீமோத்தேயு 4 :1).*

அப்படி நிற்கும் நாள் வெகு சீக்கிரம் வரப் போகின்றது.

***ஐயோ... தேவபிள்ளைகளே,***

***அந்த நாளுக்காக பயப்படுங்கள்! மிக கவனமாய் இருங்கள்! அந்த நாளுக்கான ஆயத்தத்தை இப்பொழுதே செய்ய ஆரம்பியுங்கள்! அந்த நாளுக்காக எதைச் செய்ய வேண்டுமோ அதை செய்யுங்கள்! எதை செய்யாமல் இருக்கவேண்டுமோ அதை செய்யாதிருங்கள்!***

தினமும் வேத வசனத்தின்படி நடக்கப் பாருங்கள். அதிக நேரம் ஜெபியுங்கள்.

சரி பூரணமாக்கப்பட்டவர்களைக் குறித்து பார்க்கும்முன் பூரணம் என்றால் என்ன ? என்பதைப் பார்ப்போம்.

> *ஆனால் பூரணமாக்கப்பட்டவர்கள் மற்றவர்களை விட விசேஷித்தவர்கள்.*

பூரணம் என்றால் முழுமை, நிறைவு, எல்லாமுடையது மனுஷகுமாரனுக்கு ஒப்பானது என பல அர்த்தங்கள் இருக்கின்றது.

ஆதியில் மனிதனை சிருஷ்டிக்கும் போது தேவனாகிய கர்த்தர்

*அவனை முழு மனிதனாக அதாவது நிறைவான பூரணமானவனாகத்தான் படைத்தார்.*

*ஆனால் ஆதாம் பாவம் செய்த போதோ, தன்னில் உள்ள நிறைவை இழந்து போனான்.*

*எனவே திரும்பவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இரண்டாவது ஆதாமாக வந்து. 1கொரிந்தியர் 15 : 45 ன் படி நம்மை உயிர்ப்பித்தார்.*

*உயிர்ப்பிக்கிறார் என்ற பதத்தைப் பாருங்கள். அதன் அர்த்தம் முந்தின ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது போல, பூரணமாய் இருந்தது போல, நாமும் பிந்தின ஆதாமாகிய கிறிஸ்துவால் பூரணமாக்கப்படுகிறோம்.*

*மகனே! நீ முன்பதாக வா என்றார். நான் மிகவும் பயத்தோடும் நடுக்கத்தோடும் முன்பதாக சென்றேன்.*

*இதைத் தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து* ***மத்தேயு 5 : 48 ல் உங்கள் பிதா பூரண சற் குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற் குணராயிருக்கக்கடவீர்கள்*** *என சொல்லுகிறார். காரணம் என்ன?*

*பரலோகம் பூரணமானது. அங்கே பூரணமாக்கப்பட்டவர்களின் ஆவிகள் இருக்கிறது. எனவே அங்கே நாம் போகும் போது நாமும் பூரணராக்கப்பட்ட நிலையில் தான் போக வேண்டும்.**(எபிரெயர் 12 : 23).***

*ஒருவேளை பூரணராக்கப்படாமல் போகிறவர்கள் முழு மகிமையை அடைய முடியாது.*
*ஒரு சாதாரண நிலையில். ஒருவேளை யோவான்ஸ்நானகனைப் போல இருக்கலாம்.**(மத்தேயு 11: 11).***

*பூரணராக்கப்பட்டவர்கள்தான் மணவாட்டியின் அந்தஸ்தைப் பெற முடியும்.*

***அகாஸ்வேரு ராஜா சகல ஸ்திரீகளைப்பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்பு வைத்தான்; சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜ கிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்.***

***அப்பொழுது ராஜா தன்னுடைய எல்லாப் பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும், எஸ்தரினிமித்தம் ஒரு பெரிய விருந்துசெய்து, நாடுகளுக்குச் சலக்கரணை உண்டாக்கி, ராஜாஸ்திரீக்குத்தக்க***

**வெகுமானங்களைக் கொடுத்தான்.** *(எஸ்தர் 2 : 17, 18) .*

அகாஸ்வேரு ராஜாவுக்கு பெண் தேடும்படி புறப்பட்டு பல கன்னிப் பெண்களை அழைத்து வந்து 12 மாதம் அவர்களை ஆயத்தப்படுத்தினார்கள்.

★ வெளித் தோற்றம்

★ சரீர சுகம்

★ அறிவு

★ நல் ஒழுக்கம்

★ ராஜாங்க வழிமுறைகள்.

என பல காரியங்களில் பயிற்சி கொடுத்தார்கள்.

அதில் எஸ்தர் என்ற பெண் ராணியாக முடிசூட்டப்பட்டாள். காரணம் அவள் ராஜாவின் அந்தஸ்தோடும், உடலோடும், வாழ்க்கையோடும் சேர தகுதிப் பெற்றாள்.

ராஜா விரும்பின

★ அழகு இருந்தது

★ வாசனை இருந்தது

★ குணம் இருந்தது

★ அந்தஸ்து இருந்தது.

எஸ்தரோடு பல கன்னிகைகள் சேர்க்கப்பட்டார்கள். அவர்களும் வாழ்நாள் எல்லாம் அரன்மனையில்தான் இருந்தார்கள்.

ஒரே சாப்பாடு

ஒரே இடம்

ஒரே பாதுகாப்பு

ஒரே காற்று

ஒரே பிரசன்னம்

எனினும் எஸ்தரின் அந்தஸ்திற்கு மற்ற கன்னிகைகள் வர முடியவில்லை.

எஸ்தரின் அந்தஸ்து பூரணமான அந்தஸ்து. அவள் ராஜாவோடு கூடவே இருந்தாள்.

அதேபோலத் தான் எல்லாரும் பரலோகம் போகலாம்.

ஆனால் பூரணமாக்கப்பட்டவர்கள் மற்றவர்களை விட விசேஷித்தவர்கள்.

ஒரு சமயம் பரலோகில் நான் நிற்கிறதாகக் கண்டேன்.

அங்கே நியாயாசனங்கள் இருந்தது. அதில் நம் இயேசு மகா ராஜா மிக கெம்பீரமாய் வீற்றிருந்தார். அது எஜமானிடத்தில் கணக்கு ஒப்புவிக்கும் நிகழ்வு.

ஒவ்வொருவரும் தன் தன் வரிசையில் நின்றார்கள். நான் என் மூலம் ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களோடு நின்றுக்கொண்டிருக்கிறதாக காணப்பட்டேன்.

மிகவும் பயந்து கடைசியில் நின்றிருந்த என்னை இயேசு பெயர் சொல்லி அழைத்தார்.

மகனே ரபீ முன்பதாக வா என்றார். நான் மிகவும் பயத்தோடும் நடுக்கத்தோடும் முன்பதாக சென்றேன்.

என்னோடு இருந்தவர்கள்

மிகவும் வெட்கப்பட்டு நிற்பதைக் கண்டேன்.

அவர்கள் எல்லாருடைய கண்களுக்கு முன்பதாக எனக்குரிய ஆசனத்தில் அமர வைக்கப்பட்டேன். என்னை நம்பாதவர்கள், எனக்கு விரோதமாய் பேசினவர்கள் கூட சிலர் அந்த கூட்டத்தில் நின்றார்கள்.

அதில் ஒரு குறிப்பிட்ட நபர் ஐயா நான் உங்களுக்காக கூட்டம் ஒழுங்கு செய்தேன், உங்களுக்கு காணிக்கை கொடுத்தேன். உபசரித்தேன் எனச் சொல்லி என்னிடம் வந்து அமர முற்பட்டார் விரும்பினார்.

ஆனால் அங்கே இருந்த ஒரு தேவதுாதன் அவரைத் தடுத்து, நீ அவர் அருகில் அமர முடியாது. அவர் அந்தஸ்து தனி என சொன்னார்.

இன்னும் சமயம் இருக்கிறது.

நீங்கள் நினைத்தால் அதை அடைய முடியும்!

தற்செயலாய் இந்த புத்தகம் உங்கள் கையில் கிடைக்கவில்லை.

**நீ அங்கிருப்பாயோ, நீ அங்கிருப்பாயோ, நீ அங்கிருப்பாயோ சொல் மகனே.**

* ஒரு மனிதனுடைய சரீரத்திலிருந்து ஆவி பிரியும்போது என்ன நடக்கும்?

* பரலோகத்திலே அந்த மனிதனுடைய நிலை எப்படி இருக்கும்?

* பரலோகத்திலே பூரண அந்தஸ்தை பெற நாம் என்ன செய்யவேண்டும்?

* ஒரு மனிதனுடைய அடக்க ஆராதனையின்போது ஆவி உலகில் என்ன நடக்கிறது?

* மனிதன் மரித்த பின்பு பூமியில் சம்பவித்த காரியங்களை குறித்த நினைவுகள் அந்த மனிதனுக்கு ஞாபகம் வருமா?

* ஒவ்வொரு மனிதனும் மரிக்கும் முன்பு தான் இன்ன நாளில் ஆண்டவருடைய ராஜ்யத்திற்குள் எடுத்துக்கொள்ளப்படப் போகிறோம் என்று அறிந்துகொள்ள முடியுமா?

இது போன்ற அநேக கேள்விகளுக்குப் பதில் இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.



இதை எழுதிய தந்தை. **து. ஜாண் ரபீந்திரநாத்** அவர்கள் பல புத்தகங்களை எழுதிய அனுபவம் பெற்றவர். அதோடு பல பரலோக தரிசனங்களையும், பாதாளம், நரகம் போன்ற தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் பெற்றவர். வேதவசனங்களோடு தன்னுடைய அனுபவத்தையும் சேர்த்து எழுதியிருக்கிறார். இதில் ஒவ்வொரு பகுதியும் உங்களுக்கு மிகவும் பிரயோஜனமாய் இருக்கும்.

இதுவரை இந்தப் புத்தகத்தை வாசித்திராதவர்கள் உடனே வாங்கி வாசியுங்கள்.

**ஒவ்வொரு மனிதனும்**
**கட்டாயம் வாசிக்க வேண்டிய அரிய நூல்.**